# பிரதிநிதிகள் சபையில் பரபரப்பு!

★ ★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (29-8-66) இதழ் 199

பராபவ ஆவணி 13 ஜ/ அவ்வ 12 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# "பிரஜைகளுக்குள் பாகுபாடு ஏன்?

## சர்வதேச ஸ்தாபனத்தாரிடம் நியாயம் கேட்பேன்"

### தொண்டமான் கோபாவேஷம்!

கொழும்பு, ஞாயிறு

ஸம்சாவழி பிரஜைகளுக்கும் பதிவு பிரஜைகளுக்குமிடையில் தொடர்ந்துபாகுபாடு காட்டப்பட்டு வந்தால் இப் பிரச்சினையை சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப் போவதாக இன்று பிரதிநிதிகள் சபையில் நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் எச்சரிக்கை செய்தார்.

பதிவும் பிரஜைகளுக்கு ஜவுளிக் கூப்பன் விஷயத்திலும் வேறு முறைகளிலும் பாகுபாடுகள் காட்டுவதற்கு முயற்சிகள் நடப்பதாகவும், இந்த நிலைமை தொடர்ந்து இருக்குமானால் அது மனிதாபிமானமற்ற செயல் என்றும் கண்டித்துப் பேசிய திரு. தொண்டமான், இந்தப் பிரச்சினையை முதலில் பிரதம மந்திரியின் கவனத்துக்கு கொண்டுவரப் போவதாகச் சொன்னார்.

முதலில் பிரதம மந்திரியுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியபின் திருப்தியான முடிவு ஏற்படாவிட்டால் சர்வதேசத் தொழிலாளர் நல ஸ்தாபனத்தில் இப்பிரச்சினையைக் கிளப்பி நியாயம் கோரப் போவதாக திரு. தொண்டமான் கூறினார்.

## 54 ஆசிரியர் வேலையிழந்தனர்

### 215 ஆசிரியர் தற்காலிகவேலை நீக்கம்

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீ லங்கா ஜாதிகுரு சங்கமய (ஆசிரியர் சங்கம்) வின் தலைவர் உட்பட 54 ஆசிரியர்கள் இதுவரை வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி இலாகா நடாத்திய விசாரணைகளிலிருந்து, சென்ற பொதுத் தேர்தலில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார்களென்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அரசியலில் ஈடுபட்டதாக பொலிசாரின் அறிக்கைகளிலிருந்து நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து 225 ஆசிரியர்கள் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இன்னும் 115 ஆசிரியர்கள் மீதான விசாரணைகள் முடிவடையும் கட்டத்திலிருப்பதாகவும் அடுத்த மாத இறுதிக்குள் முழு விசாரணைகளும் முடிவடையுமென எதிர்பார்ப்பதாகவும் கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசாரணைகளின் பின் 28 ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளனர்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், தமக்கு வேலைநீக்கம் செய்வதற்கு வித்தியாதிபதிக்கு அதிகாரமில்லையென எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யவிருக்கின்றனர்.

அறிவித்தல்

இடமாற்றம்

சுன்னாகம் கந்தரோடை வீதியில் இருக்கும் கபிரியேல்ஸ் வைத்தியசாலை (ஆயுர்வேத வைத்தியமும்—மிருக வைத்தியமும்) நிகழும் 1966-ம் ஆண்டு ஆவணி மாதம் 29-ம் திகதி (29-8-66) திங்கட்கிழமை பகல் 11 மணியிலிருந்து அதே வீதியில் மேற்கே 100 யார் தூரத்திற்குள் எமது இல்லத்திற்குக் கிழக்கே அமைந்திருக்கும் புதிய 'கபிரியேல்ஸ்' (Gabriels) கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறதென்பதை அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,
டாக்டர் ஜி. ஜோர்ஜ், டி. ஏ. ம்.
946

## "சிறிமா உத்தரவு கொடுக்கவில்லை"

### டெலிபோன் கமிஷன் முன் பீலிக்ஸ் சாட்சியம்

கொழும்பு, ஞாயிறு

"டெலிபோன்" ஒற்றுக் கேட்பதற்கு முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா ஒருபோதும் உத்தரவு கொடுத்தது கிடையாது" என்று முன்னாள் நிதி மந்திரியும் முன்னாள் பாதுகாப்பு வெளிவிவகார உதவி மந்திரியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, டெலிபோன் ஒற்றுக் கேட்டல் சம்பந்தமான விசாரணைக் கமிஷன் முன் இன்று சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

கமிஷனர் திரு. என். சிவஞானசுந்தரம் முன்னிலையில் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா மேலும் சாட்சியமளிக்கையில் நாட்டின் நலனுக்காகவும்பாதுகாப்புக்காகவும் நல்ல நோக்கத்துடன் தான் டெலிபோன் சம்பாஷணை ஒற்றுக் கேட்பதாக இருந்தாலும் கூட அது தவறானதென்று சொன்னார்.

டெலிபோன் சம்பாஷணைகள் ஒற்றுக் கேட்பது பற்றி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவுக்குத் தெரிந்திருந்தாலும் அதுபற்றி அவர் நடவடிக்கை எடுக்க முடியாத எக்கச்சக்கமான நிலை அவருக்கு ஏற்பட்டதென்றும் ஏனெனில் அவரின் நன்மைக்காகவே அவர்கள் அவ்வேலையைச் செய்தனரென்றும் திரு. பீலிக்ஸ் சொன்னார்.

(10 பக்கம் பார்க்க)

## ரயில் பிரயாண சீட்டுகள் பிள்ளைகளுக்கு வேண்டுமாம்

கொழும்பு, ஞாயிறு

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளுக்கும் இலவச ரயில்வே பிரயாண சீட்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

பிரதிநிதிகள் சபைக் கமிட்டியொன்றின் கூட்டமொன்றில் அண்மையில் இந்தப் பிரச்சினை விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களுக்கு ரயில்வே வாரண்டுகள் வழங்கப்படும் அதே அடிப்படையில் பாரிலிமெண்ட் அங்கத்தவர்களுக்கும் வரண்டுகள் வழங்கும்படி அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமென்று கூட்டத்தில் யோசிக்கப்பட்டது. ஆனால் முடிவு ஒன்றும் செய்யப்படவில்லை.

## நாகநாதன் 'கெடுபிடி'

கொழும்பு, ஞாயிறு

நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் உயர்கல்வி மசோதா விவாதத்தின் போது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த மூன்று திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பில் வாக்களிக்க மறுத்ததின் மூலம் டாக்டர் நாகநாதன் சபையில் பரபரப்பை ஏற்படுத்தினார். அதேசமயம் அவர் எதிர்க்கட்சியினரின் திருத்தங்களுக்கு சாதகமாகவும் வாக்களிக்கவில்லை.

வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்டபோது அவர் பேசாமல் உட்கார்ந்திருந்தார். விவசாயமந்திரி திரு. பண்டாவும் தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களான திரு. கதிரவேற்பிள்ளையும், திரு. நவரத்தினமும் டாக்டர் நாகநாதனை வாக்களிப்பில் கலந்துகொள்ளும்படி வற்புறுத்தினார்கள்.

திரு. பெர்னாட் சொய்சா பேசுவதற்கு முன்பாக டாக்டர் நாகநாதன் பேசியபோது கல்விமந்திரி விடுக்கும் எல்லா உத்தரவுகளும் பிரதிநிகள்சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று ஒரு திருத்தத்தை பிரேரித்தார். ஆனால் அரசாங்கக் கட்சி அங்கத்தவர்கள் அவரை மேலே தொடர விடாமல் தடுத்துவிட்டனர்.

இந்தக் குழப்ப நிலைமையில் டாக்டர் நாகநாதன் சபாநாயகரைப் பார்த்து "ஐயா, ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றவகையில் நிரந்தரக்குழுவில் எங்களுக்கு இடமே கொடுக்கப்படவில்லை. நாங்களும் எங்கள் கருத்துக்களைச் சொல்ல

(10-ம் பக்கம் பார்க்க)

## நீதி மந்திரிக்கு உத்தியோகமொழி தெரியாது

### எம். பி. யின் கிண்டல்

கொழும்பு, ஞாயிறு

இன்று பிரதிநிதிகள் சபையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த லக்ஷ்மண் ஜயக்கொடி பேசியபோது உத்தியோக மொழி சட்டத்தை நீதி மந்திரி திரு. விஜயமானேயிடம் விடப்பட்டிருப்பதைக் கண்டித்தார்.

நீதி மந்திரிக்கு உத்தியோக மொழியில் பரிச்சயம் இல்லை அதனால்தான் உத்தியோக மொழிச்சட்டம் ஒழுங்காக அமுலாக்கப்படவில்லை என்று அவர் கண்டித்தார்.

நீதி மந்திரியிடம் விடப்பட்டிருக்கும் உத்தியோக மொழிச் சட்டத்தை அமுல் நடத்தும் பொறுப்பு பிரதம மந்திரியிடம் இருக்க வேண்டும் என்று அவர் யோசனை கூறினார்.

# வர்த்தகத்துறை முழுதும் இலங்கையர் மயமாகும்

## உதவி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, ஞாயிறு

வர்த்தகத்தை முற்றாக இலங்கையர் மயமாக்குவதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள் என்று உதவி வர்த்தக மந்திரி திரு. எஸ். ஏ. பீரிஸ் இன்று பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

அரசாங்கம் புதிய இறக்குமதி வர்த்தகங்களை இலங்கையருக்கு கொடுக்க முடிவு செய்திருக்கின்றது. வர்த்தகத்தை இலங்கையர் மயமாக்கும் திட்டத்தின் ஒரு பகுதி ஏற்கனவே அமுலாக்கப்பட்டுள்ளது. இறக்குமதி வர்த்தகத்தில் இன்னும் வெளிநாட்டவரின் கை இருந்தேவருகின்றது. ஆனால் அது படிப்படியாகக் குறைக்கப்படும் என்று உதவிவர்த்தகமந்திரி கூறினார்.

வர்த்தகஅமைச்சின் மானியம் மீதான விவாதத்தில் பேசிய உதவிமந்திரி எதிர்காலத்தில் இறக்குமதிசெய்யப்படும் பொருட்களை விநியோகிக்கும்பொறுப்பு கூட்டுறவுமொத்த ஸ்தாபனத்திடமும் தனியார்துறை இலங்கையரிடமும் கொடுக்கப்படும் என்றார்.

வர்த்தகஅமைச்சுக்கான மானியம் நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## மனேச்சர் தேவை

8-ம் வகுப்புச் சித்தியுடன் கூட்டுறவுப் பயிற்சியில் சித்தியும் பெற்றிருப்பவர் 21 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர் இறு நட்சாட்சிப் பத்திரங்களுடன் பதிவுத் தபால் மூலம் காரியதரிசி வேரக்வேணி ப. நோ. கூ. சங்கம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி என்ற விலாசத்திற்கு 5—9—66-க்கு முன் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

சம்பளம்: படிகள் உட்பட மாதம் ரூபா 100/-

பிணை: ரொக்கப் பிணை ரூபா 1000/-

ஆதனப்பிணை ரூபா 2000/- 951

## காணி விற்பனைக்கு

சிவப்பிரகாசம்வீதி, ஐயனர் கோவிலடி வண்ணார் பண்ணையில் 5 1/2 பரப்பு காணி, நல்ல குடிநீர் கிணற்றுடனும் மற்றும் பிரயோசனங்களுடனும் விற்பனைக்குண்டு. குடியிருப்பில்லாத காணி. கோவில்களுக்குச் கிட்டியதும், யாழ். இந்துக்கல்லூரி இந்து மகளிர் கல்லூரி ஆகியனவற்றுக்கு கிட்டவுள்ளது. கூடிய மதிப்பீடுள்ளது. மேலும் விபரங்களுக்கு T. செல்லையா, விற்பனை ஆணையாளர், 37, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். 950

## செல்வச்சந்நிதி தேர் உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள் இன்று செல்வச்சந்நிதி முருகன் தேர்உற்சவம் காலை 10 மணிக்கு நடைபெறும்.

## வியட்காங்கியருக்கு டானிஷ் உதவி

கொப்பன்ஹேகன், ஆக. 28 தென்வியட்னாமில் போரிடும் வியட்காங் கொரில்லாக்களுக்கு ஆட்களை அனுப்ப டானிஷ் கொம்யூனிஸ்ட் இளைஞர்கள் முன்வந்துள்ளனர். தென்வியட்னாம் விடுதலை முன்னணி அழைப்பு விடுத்ததும் தொண்டர்களை அனுப்பத் தமது இயக்கம் தயாராகவிருப்பதாக அவர்களின் கட்சிப்பத்திரிகைகூறியுள்ளது. (பி. டி. ஸி.)

## சார்டீனியாவில் கோர சம்பவங்கள்


சார்டீனியா, ஆ. 28 கொள்ளை இரத்தம்சிந்துதல் இவை அதிகமாகவுள்ள நீண்ட சரித்திரத்தைக் கொண்ட சார்டீனியாவில் நவீனகாலத்தில் இதுவரை நடைபெறாத கோரங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாரம் உள்ளூர் நிலச்சொந்தக்காரர் ஒருவர் கடத்திச்செல்லப்பட்டு' கூரிய கற்களினுல் அடித்துக் கொல்லப்பட்டு, தலைகீழாகப் புதரொன்றில் எறிந்து விடப்பட்டார்.

இம்மாத முற்பகுதியில் 15 வயது மகன் முன்னிலையில் அவனது தந்தை சுடுக் கொல்லப்பட்டார். பின்னர் மகனின் தலையை வெட்டிச் சாய்த்தனர்.

இதே மாதத்தில், இரண்டு மணித்தியாலங்களுக் கிடையில், 30பேரை றேட்டில் தடைசளைப்போட்டுமறித்துவிட்டு, அவர்களிடமிருந்த பொருட்கள் எல்லாவற்றையும்முக மூடியணிந்த கொள்ளைக்காரர்கள் அபகரித்தனர். இதே மாதிரி இன்னெரு இடத்தில் றேட்டுத் தடை வைக்கப்பட்டபோது தப்பிஓட முயன்ற ஒருவர் இக்கொள்ளைக்காரரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (பி.டி:ஸி.

சர்வதேசப் புகழ் பெற்றது




# சவரின்

### பார் சோப்

**உங்கள் பணத்தை வீண்விரயமாக்காத ஒரு சோப்.**

சவரின் பார் சோப் பல காரியார்த்த சலவைச் சோப்பாக மேன்மேலும் இலங்கை இல்லங்களில் விரும்பி உபயோககிகப்பட்டு வருகின்றது அதன் சுத்தமான, பாதுகாப்பான சேர்க்கை முறை கரடுமுரடான சமையலறைப் பாத்திரங்களை கழுவுவதற்கும் விலை மதிக்கவொண்ணுததொன்றுக்கின்றது. சவரின் பார் சோப்பின் திண்மைத் தன்மையானது தேய்வைத் தடுப்பதுடன் நீண்ட கால உபயோகத்திற்கும் வழிகோலுகின்றது.

பி. சி. கி.

# வரி விளம்பரம்

## கல்வி

தபால்மூலம்:

மாணவ ஆசிரியர் பரீட்சைக்கு சகல பாடங்களும் தபால்மூலம் (மாதிரிவினுப் பரீட்சை)போதிக்கப்படுகின்றது. G.A.Q.3-9-66ல் ஆரம்பம். விபரங்களுக்கு 5 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 891

வகுப்புகள்:

திறமையான சித்தி பெறுதற்கு ஓர் அரிய வாய்ப்பு! G. C. E, Prep. G. C. E., J. S. C. கலை - விஞ்ஞான வகுப்புகளுக்கு ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் டிசம்பர் 1966.ல் தோற்றி சித்தி பெறுதற்குப் போதிய பயிற்சி அளிக்கப்படும். ஏனைய விபரங்களை நேரிற் பெறலாம். சென். ஆன்ஸ் டியூட்டறி, 5பிறென் றேட். யாழ்ப்பாணம். 1209

வகுப்புகள்:

எதிர்வரும் மார்கழி G. C. E. பரீட்சைக்காக சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், கலை, விஞ்ஞானம், (தமிழ்/ ஆங்கிலம்) விசேஷ வகுப்புகள். 31-ம் திகதிக்குமுன் சேரவும். வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை/வதிரி, கரவெட்டி. 889

பொது அறிவுவினுவிடை:

பொதுஅறிவு வினுவிடை 20 அப்பியாசங்கள்-2000 பொருட்குறிப்புகள் சகல அரசினர் பகிரங்கப் பரீட்சைகளுக்கும் உரிய கைநூல் விலை ரூபா 3/- ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 858

## விற்பனைக்கு

காணியும் வீடும்

3 பரப்புக்காணி புது வீட்டுடன் எல்லா வசதியுடனும் விற்பனைக்குண்டு. பாலகிருஷ்ணன் 34-ம் நம்பர் குறுக்கு வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் நேரே தொடர்பு கொள்ளவும். 897

## சோதிடம்

பிரபல சோதிடம், சாதக பலன் ரூபா 3-00, ரேகை பலன் ரூபா 2-00, ஆருட பலன் ரூபா 1-00, S' சிவ குருநாதன், 160 அரசடி றேட். யாழ்ப்பாணம், கந்தர்மடம், 1205

## காணவில்லை

திறப்புக்கோர்வை:

திறப்புக் கோர்வை ஒன்று காங்கேசன் துறைக்கும் யாழ்ப்பாண டிஸ்கிக் கோட்டுக்குமிடையில் 28-8-66 காலையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்தால் சன்மானம் கொடுக்கப்படும். 1210

## எல்லையில் அமைதி

புதுடில்லி, ஆக. 28 கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப்பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் துருப்புகள் குவிக்கப்படுவதாக சில செய்திகள் தெரிவித்திருந்த போதிலும் எல்லையில் அமைதி நிலவுவதாகக் கடைசியாகக் கிடைக்கப்பட்ட செய்திகள் கூறுகின்றன.

## பிரதமர் சார்பில் நீதி அமைச்சர் செல்வார்

கொழும்பு, சனி அடுத்த மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்கள் மகாநாட்டில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவின் சார்பில் நீதி அமைச்சர் செனட்டர் விஜயமானே கலந்துகொள்வாரென அறியப்படுகிறது.

பொருளாதார விஷயங்களில் அவசர தீர்வுகாணப்படவேண்டியநிலை இருப்பதாலேயே பிரதமர் அங்கு இப்போது செல்லமுடியாதிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஏற்கனவே தமது சிரேஷ்ட மந்திரிகளே மகாநாட்டில் கலந்து கொள்வதாக அறிவித்துள்ளன. எனவே 3 ஆசிய நாடுகளும் பிரதமர்கள் ரீதியில்லாது அமைச்சர்கள் ரீதியிலேயே பிரதிநிதித்துவம் செய்யப்படும்

நீதி அமைச்சர்செனட்டர் விஜயமானே தலைமையிலமைந்த கோஷ்டியில் லண்டனிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் டாக்டர் ஜி.பி. மலலசேகரா, பொன்னிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு.ஜி.எஸ்.பீரிஸ், திரு. எச்,ஒ. விஜயகுணவர்த்தன, வெளிவிவகார பகுதி டைரக்டர் திரு.ஆர்தர் பஸநாயகா லண்டனிலுள்ள இலங்கை வர்த்தக கமிஷனர் திரு. கார்ல் அமரதுங்கா ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள்,

## பஜனை

யாழ்ப்பாணம், திங்கள் இன்று இரவு 9 மணியளவில் நல்லூர் பஜனைச் சபையினர் நல்லூர் தேவஸ்தானத்திலிருந்து பாதயாத்திரையாக செல்வச்சந்நிதி முருகன் தேவஸ்தானத்தையடைந்து தீர்த்தோற்சவத்தைத் தரிசிப்பார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மே. வங்காள எல்லையில் பாகிஸ்தான் படைக்குவிப்பு வாபஸான பகுதிகளில் மீண்டும் நிலை கொண்டன

## ஜஸோரில் சீன டாங்கிகள்; மெஹர்பூரில் புதிய விமான நிலையம் 3 மைல் எல்லையில் இரவில் நடமாடுவதற்குத் தடை"

புதுடில்லி, ஆகஸ்ட் 28

டாஷ்கண்ட் பிரகடனத்தை அப்பட்டமாக மீறி, மேற்கு வங்காள எல்லை நெடுகிலும் ஏராளமான பாகிஸ்தான் துருப்புகள் புதிதாகக் குவிக்கப்பட்டிருப்பதாகவும் கிழக்குப் பாகிஸ்தான், மேற்குப் பாகிஸ்தான் எல்லைகளில் முன்னர் காலிசெய்யப்பட்ட முக்கிய இடங்களில் மீண்டும் பாகிஸ்தான் துருப்புகள் நிலை கொண்டிருக்கிறதென்றும் சிலசெய்திகள் இன்று அறிவித்துள்ளது.

மேற்கு வங்காளத்தில் குஷ்டியா ஜில்லாவில் ஏராளமான பாகிஸ்தான் ராணுவத்தினர் புதிதாக நிலைகொண்டிருக்கின்றனர் என்றும் செய்திகள் அறிவித்துள்ளது.

### சீன டாங்கிகள் நடமாட்டம்

ஜஸோரில் சீன டாங்கிகளின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறதென்றும் சீன ராணுவ நிபுணர்களும் ஆலோசகர்களும் இப்பகுதியின் பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிட்டு வருகின்றனர் என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

### புதிய விமான நிலையம்

மெஹர்பூரில் பாகிஸ்தான் புதிய ஹெலிகாப்டர் விமான நிலையமொன்றை அமைத்திருக்கிறது. இந்த விமான நிலையம் அடுத்த மாதம் ஆறும் திகதி (பாகிஸ்தான் பாதுகாப்பு தினம்) திறந்து வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பாடசாலைகளில் ராணுவம்

மேற்கு வங்காள எல்லைக் கருகிலுள்ள பாடசாலைகள் யாவும் மூடப்பட்டு இப்பாடசாலைகளில் பாகிஸ்தான் ராணுவத்தினர் உள்ளனர் என்றும் அவர்கள் எல்லைக் கருகில் புதிய பல நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியிருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### இரவில் நடமாடுவதற்கு தடை

கிழக்குப் பாகிஸ்தான் மேற்கு வங்காள எல்லையில் மூன்று மைல் சுற்றளவுக்கு பொது மக்களுக்கு தடை உத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது. இரவு நேரத்தில் இப்பகுதியில் ராணுவம் தவிர்ந்த வேறு எவரும் நடமாடக்கூடாதென்று உத்தரவிடப்பட்டுள்ளது!

### சீன உதவிகள் குறித்து அறிவிப்பு

இதற்கிடையே பாகிஸ்தான் தேசிய சட்ட சபைத்தலைவர் நேற்று சட்டசபைக் கூட்டத்தில் பேசுகையில், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சீனு உதவியளிக்கும் என்று உறுதியளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இவர் அண்மையில் சீனு சென்று திரும்பியவர்.

பாகிஸ்தானுக்கு நெருக்கடிகள் ஏற்படும்பொழுது சீனுவின் சகல உதவிகளும் பாகிஸ்தானுக்குக்கிடைக்குமென்றும் சந்தர்ப்பங்களை மட்டுமே சீனு எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

## தமிழ்நாட்டுச் செய்திகள்

### முன்னேறுகிறது

கடந்த பத்து வருடங்களில் சென்னை ராஜ்யம் பல துறைகளிலும் மிகவுமு முன்னேறி விட்டதென்ம் சென்னை கவர்னர் சர்தார் உஜ்ஜயில்சிங் தெரிவித்தார். மைலாப்பூர் உட்லண்ட்ஸ் ஹோட்டலில் கவர்னருக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரமொன்றில் பேசுகையில் சென்னையின் சுற்றுப் புறங்களில் தொழில்வளமிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது என்றுகூறினர்.

ஃ ஃ ஃ

### கூவம் நதியில்

அமைந்த கரை, கூவம்நதியில் பத்துவயதுச்சிறுவனின் பிணமொன்று மிதக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

### விவசாய விமானம்

விசேஷ சோவியத் விவசாய விமானமொன்றுபுதன் கிழமை டில்லியிலிருந்து சென்னை வந்து சேர்ந்தது. விழுப்புரம் திண்டிவனம்பகுதியில் 18000 ஏக்கர் பரப்புள்ள கடலைக்காய் பயிரில் இந்த விமானம் பூச்சிகொல்லும் மருந்தைத் தெளிக்கும்.

### சிசுவின் சடலம்

மேற்கு மாம்பலத்தில் ஒரு வீதியில் சிசுவின் சடலமொன்று துணியால் சுற்றப்பட்டுக்கிடக்க பொலிசார் கண்டு பிடித்துள்ளனர். இது சம்பந்தமாக 17 வயதுப்பெண் நகரிலுள்ள பிரசவ ஆஸ்பத்திரியில் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

### யுத்தக்கப்பல்

கடலிலிருந்து வானவெளி வீரரை மீட்ட அமெரிக்கயுத்தக்கப்பல் ஒன்று சென்னை வந்திருக்கிறது. 'யு, எஸ். எஸ் கோவா' என்ற இக்கப்பல் 1962-ல்அமெரிக்க வானவெளி வீரர் கிளெனை மீட்டு கரை சேர்த்தது. இக் கப்பலில் பல விசேஷ கருவிகள் உண்டு.

ஃ ஃ ஃ

### கடத்தல்வழக்கு

பாண்டிச் சேரியிலிருந்து சென்னைக்கு மதுவகைகள் கடத்தியதாகக்குற்றம்சாட்டி சென்னை பாண்டியஜாரையைச் சேர்ந்த லட்சாதிபதி நாராயணன்செட்டிமீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## "காடைத்தனத்தை உடனே நிறுத்துக"

### சீனுவுக்கு ரஷ்யா அறிவிப்பு

மாஸ்கோ, ஆக. 28

கம்யூனிஸ்ட் சீனுவுக்கு ரஷ்யா அனுப்பிய கண்டனக் குறிப்பொன்றில் காடைத்தனமான பகிரங்க நடவடிக்கைகளுக்கு உடனடியாகமுற்றுப்புள்ளிவைக்குமாறு கோரியுள்ளது.

சீனுவில் நடைபெற்று வரும் கலாச்சாரப் புரட்சியின் ஒரு அங்கமாக ரஷ்யத் தூதரகத்துக்குமுன் நடைபெற்ற அசம்பாவிதமான சம்பவங்களையும்ரஷ்ய அதிகாரிகள் தாக்கப்பட்டதையும் இக்குறிப்பில் ரஷ்யாகுற்றம் சாட்டியுள்ளது.

சோவியத் கொடி பறந்து கொண்டிருந்த காரை நிறுத்தி அக்காருக்குள்ளிருந்த ரஷ்யத் தூதரக உயர் அதிகாரிகளை மேலும்அவ்வழியே போகவிடாமல் தடுத்து நிறுத்தியது குறித்தும் ரஷ்ய தூதரக அதிகாரியொருவர் மீது கற்கள் வீசித் தாக்கப்பட்டது பற்றியும்இக் குறிப்பு கண்டித்துள்ளது.

இதற்கிடையே சீனுவில் இடம்பெற்றுவரும் கொள்கை வாதத்தினல் பீகிங்கிலுள்ள மிகப்பெரிய மசூதியொன்று நேற்று முன்தினம் மூடப்பட்டுள்ளது. இதனுடன் கத்தோலிக்கர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் தலைதூக்கியுள்ளனவாம்.

## பற்களைப் பாதுகாக்க செயற்கை பசை!

டோக்கியோ, ஆக. 28

பற்களைப் பாதுகாக்கும் செயற்கைப் பசையொன்றை ஜப்பான் வைத்திய நிபுணர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இந்தப் பசையை பற்களில் ஒரு தடவை பூசிக்கொள்வதன் மூலம் ஒன்பது மாதங்களுக்கு பற்களைக் கெடாமல் பாதுகாக்க முடியுமென்றும் பின்னர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை இப்பசையை மீண்டும்பூசிக் கொள்ள வேண்டுமென்றும் இந்த நிபுணர் கூறியுள்ளார்.

## இளைஞர் இயக்கத்தினர் எண்மர் கொலை

### பீகிங்கில் எதிர்ப்பு வலுக்கிறது

பீகிங், ஆக. 28

சீன "றெட்கார்ட்" என்ற இளைஞர் இயக்கத்தின்கெடுபிடிகளுக்கு பீகிங் நகரில் எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறதென்று இங்கிருந்து வெளியாகும் ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இளைஞர் இயக்கத்தின் தீவிர நடவடிக்கைகளினல் நகரம் அல்லோல கல்லோலப்பட்டுள்ளதென்றும் அதே நேரத்தில் எதிர்ப்புகளும் அதிகரித்து வருகிறது என்றும் இச்செய்திகள்தெரிவிக்கின்றன.

### எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்

எதிர்ப்புகளின் விளைவாக இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த எட்டுப்பேர்கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்று செக்கோஸ்லோவேகிய செய்தி ஸ்தாபனமொன்று அறிவித்துள்ளது.

பீகிங்நகரில் பொதுமக்கள் அதிருப்தியுது பீதியும் கொண்டுள்ளனரென்றும் இளைஞர் இயக்கத்தினர் இப்போது கோஷ்டி கோஷ்டியாகவே இயங்கி வருகின்றனரென்றும் இச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த இளைஞர்இயக்கத்தினர்வீடுகளில்புகுந்துமக்களை அடித்துதுன்புறுத்துவதுடன் வீடுகளை நாசமாகுகின்றனர் என்றும் தாங்கள் விரும்பும் நபர்களை காரில்கடத்திச் சென்று வெகு தூரத்தில் இறக்கிவிடுகின்றனர்என்றும் செக்கோஸ்லோவேகிய செய்தித்தாபனம் கூறுகிறது.

சீன "றெட்கார்ட்" என்ற இளைஞர் இயக்கத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக வெளிஇடங்களிலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நகரப் புறத்துக்குக் கொண்டுவரப் படுகின்றனர் என்றும் செய்திகள்தெரிவிக்கின்றன.

## கோக்குவில்வாக்காளர் இடாப்பு

யாழ்ப்பாணம், தலஸ்தாபன அதிகாரிகளின் 12(3)ம் இலக்கம் கொண்ட (அத்தியாயம்262) பிரிவின் கீழ் கொக்குவில் கிராமசபையின் வாக்காளர் இடாப்புகள் தயாரித்தல் அடுத்தமாதம் 1-ந் திகதி ஆரம்பமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.




எவ்வளவு இரம்மியமான சுவை!

லயன் லாகர், இறக்குமதியாகும் தலைசிறந்த ஹொப்ஸ், மோல்ட் ஆகியனவும், பூரணமாகப் பக்குவம் செய்து சுத்திகரித்த இயற்கைத் தூய்மை வாய்ந்த பளிங்கு போன்ற நுவரெலியாத் தண்ணீரும் கொண்டு, வடிக்கப்படுகிறது.

பளபளக்கும் பொன் நிறமான லயன் லாகர், மனதுக்கு மகாதிருப்தியும், மட்டில்லாப் புத்துணர்ச்சியும் ஊட்டும் இதமான சுவை கொண்டது. கேட்டு வாங்குங்கள்-




நுவரேலியா லயன் லாகர்

(நிர்மலமான நுவரேலியா நீரே அதன் இரகசியம்!

சிலோன் புரூவரி லிமிட்டெட், நுவரேலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எல்லையற்ற பொருளிடத்தே மனம் பதிந்து இருதயத்தின் நேயம் விரிந்து, உலகத்தையும் அங்குள்ள உயிர்கள் முழுவதையும் தழுவி நிற்க வேண்டும். இந்த உயர்ந்த விடுதலையைத் தர்மத்தின் இலட்சியமாகக் கொள்ளாதுவிட்டு, பின்னும் ஒருமனிதன் தான் இறைவனின் பக்தனென்றும், தர்மத்தின் வழி நடப்பவனென்றும் கூறினால், அதன் உண்மையில் தன்னையே ஏமாற்றிக் கொள்கிறான். — சுவாமி இராமதாஸர்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

பழைய பராபவ ஆண்டு ஆவணி மீ 13 உ. (29-8-66)


## வவனியாவின் அபிவிருத்தி

வவனியா மாவட்டத்தின் அபிவிருத்தியை எடுத்துக் காட்டும் பொருட்காட்சி ஒன்று இன்றுமாலை வவனியா மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகிறது. விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றில் வவனியா மாவட்டம் அடைந்துள்ள அபிவிருத்தியை எடுத்துக் காட்டும் இப்பொருட்காட்சி, இம்மாவட்டம் மேலும் விருத்தியடைவதற்கு ஒரு தூண்டுதலாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

வரண்ட பிரதேசமான இலங்கையின் வடபகுதியைச் சார்ந்ததாக வவனியா மாவட்டமும் இருப்பினும் பாலைவனத்தில் ஒரு சோலைவனமாக அது மிளிர்கிறது. வவனியா மாவட்டத்தில் இப்பொழுது 55,000 ஏக்கர் நிலத்தில் நெல்லும் 80,000 ஏக்கர் நிலத்தில் உபபயிர்களும் செய்கை பண்ணப்படுகின்றன. இவை தவிர இன்னும் காடாகவும் தரிசாகவும் பெருந்தொகையான ஏக்கர் நிலம் இங்கு கிடக்கின்றன. இவற்றையும் சரியான முறையில் பயன்படுத்தினால் நாட்டின் உணவுப் பிரச்னை ஓரளவாவது குறையும். வவனியா மாவட்டத்தில் சிறு சிறு குளங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. கனகராயன் ஆறு இவற்றில் ஒன்று. இவை தவிர இன்னும் பல குளங்கள் தூர்ந்தும் அழிந்தும் கிடக்கின்றன. ஒரு காலத்தில் இந்நாட்டின் உணவுத் தேவையில பெரும் பங்கைத் தீர்த்துவைத்த வன்னிப் பகுதியாகிய வவனியாவில் அந்நாளில் அமைக்கப்பட்ட குளங்கள் இன்று மறைந்தும், உபயோகத்துக்கு உதவுமாறும் இருக்கின்றன. இவற்றைச் சீராக்கினால் இப்பகுதியில் மேலும் பல ஏக்கர் நிலத்தை விவசாயத்துக்குப் பயன்படுத்தலாம். கனகராயன் ஆறு மூலம் இரணைமடுக்குளத்தினூடாக ஆனையிறவுக் கடலேரித் திட்டத்துடன் மகாவலிகங்கையை இணைத்து வடபகுதித் தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது. இச்சமயத்தில் வவனியா மாவட்டத்திலுள்ள தூர்ந்துபோன குளங்களை சீர்செய்தும் புதிய குளங்களை வெட்டியும் மகாவலிகங்கை நீரையும் மழைநீரையும் தேக்கி வைக்க முயற்சி செய்வது இப்பகுதியில் இருபோகப் பயிர்ச் செய்கைக்கும் நாட்டுக்குத் தேவையான உபஉணவுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கும் வழிவகுப்பதாகும்.

உணவுச் செய்கைக்கு மட்டுமல்ல பல புதிய சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் வவனியா மாவட்டத்தில் நிறைய வாய்ப்பிருக்கிறது.

நமது நாட்டுக்குத்தேவையான பாலுணவுக்கு நாம் வெளிநாடுகளையே எதிர்பார்க்க வேண்டிய நிலையிலுள்ளோம். வவனியா மாவட்டத்திலுள்ள நாடுகளில் ஒருபகுதியை கால்நடைகளின் உணவுக்கென புல்வயலாக்கி, இப்பகுதியில் கால் நடைப் பண்ணைகள் அமைக்க முயற்சி செய்யவேண்டும். நல்ல இன கால்நடைகளை விருத்திசெய்யவும் கால் நடைப்பண்ணைகளை ஆரம்பித்து பால் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் இம்மாவட்டம் மிகப் பொருத்தம். பாலுணவு உற்பத்தி பெருகினால் இதற்காக வெளிநாடு செல்லும் பெருந்தொகைப் பணம் மிச்சமாவதுடன், நாட்டில் போஷாக்கின்மையால் நலிவுறும் வருங்காலச் சந்ததியினரும் வலிவுள்ளவர்களாக வாழவழிபிறக்கும்.

இறைச்சி முட்டை ஆகியவைகளின் உற்பத்திக்காகவும் ஆட்டுப்பண்ணை, கோழிப்பண்ணைகளையும் வவனியா மாவட்டத்தில் அமைக்க வாய்ப்பும் வசதியும் உண்டு.

வெங்காயம் செத்தல் மிளகாய், உருளைக் கிழங்கு, நிலக்கடலை, மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு காய்கறிகளைப் பெருமளவில் பயிர் செய்து அந்நிய செலாவணியை மிச்சப்படுத்தவும், உள்நாட்டுத்தேவையைப் பூர்த்திசெய்யவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. உப உணவுப் பயிர்ச்செய்கை யோசனையும் மகாவலி கங்கைத் திட்டமும் செயல்படத் தொடங்கியதும் வவனியா மாவட்டம் மட்டுமல்ல நாடுமுழுவதுமே செழிப்படைய வழி பிறக்கும். வவனியா மாவட்ட மக்கள் உழைப்பாளிகள். அவர்களின் உழைப்பின் பயனையும் திறனையும் இன்று ஆரம்பமாகும் பொருட்காட்சி எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கம் உதவியும் ஊக்கமும் அளித்தால் நாட்டின்பொருளாதாரப் பிரச்னையில் பெரும்பகுதி நீங்குவதற்கு வவனியா மாவட்டமே வழிகாட்டும்.

### நெசவாலை பயிற்சி நிலையம்

உடுவில், திங்கள் சங்குவேலியில் அரசாங்க உதவியுடன் நிறுவப்பட்டு வரும் நெசவாலைப் பயிற்சி நிலையக்கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன உத்தியோக பூர்வமாக இந்த நெசவாலைப் பயிற்சி நிலையம் அடுத்த மாதம் 9-ம் திகதி திறந்துவைக்கப்படவிருக்கிறது. யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ... ன் அபயசேகரா பயிற்சி நிலையத்தைத் திறந்துவைக்கவிருக்கிறார்.

# எதிர்காலத்தின் பொறுப்பு எம்முடையதே!

— திரு. டி. எம். பி. வி. தகநாயக்கா —
(அரசாங்க அதிபர், வவனியா.)

இன்று இலங்கையில் கடந்த எக்காலத்திலும் பார்க்க பொருளாதார அபிவிருத்தி மிக மிக அவசியமாகும். பிறநாட்டாரை எதிர்பாராது ஒரு சம்பூரணமான பொருளாதார பூரணத்துவம் அடைவதற்கு மாத்திரமன்றிவளர்ந்துகொண்டு போகும் ஜனத்தொகை காரணமாக நம் தற்போதைய வாழ்க்கைத்தரத்தை உயர்ந்துகொண்டு போகாமல் பாதுகாக்கவும் பொருளாதார சமூக முன்னேற்றம் துரிதமாக அடையவேண்டியது அவசியமாகும். எங்கள் பொருளாதாரத்தின்முக்கியமான பிரிவுகளில் முன்னேற்றம் அடைவதற்குத் திட்டங்கள் அரசாங்கத்தினால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும்பணியை விசேட திணைக்களங்கட்கு ஊடாக அரசாங்கமே மேற்கொண்டுள்ளது. ஆனால் திட்டங்களை நடைமுறையில் செயல்படுத்துவது முழு மக்களையுமே சாரும் இது எவ்வாறாயின் ஒரு ஜனநாயக முறையின்கீழ் தேசிய முன்னேற்றம் ஒரு முதலீடு மாத்திரமல்லாது மக்கள் முன்னேற்றத்தால் அடையும் பலாபலன்களை ஒன்றுகூட்டி அனுபவித்தாலும் ஓர் அபிவிருத்தித் திட்டம் நிறைவேறுவதற்கு அரசாங்க உத்தியோகத்தரும் தனிப்பட்ட மக்களும் அத்திட்டத்தில் எதிர்பாக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கு அக்குறிக்கோளை நோக்கிப் பல இடங்களில் முன்னேறும்படி உந்தப்படுவது அவசியமாகின்றது. ஆகவே முன்னேற்றத்திட்டங்கள் வெற்றியடைய மக்கள் ஒன்று சேர்ந்துபங்குபற்றுதல் இன்றியமையாததொன்றாகும்.

மக்களை பொருளாதார முன்னேற்றங்களில் பங்குபற்றும்படி ஊக்குவிக்கவேண்டிய ஒரு தத்துவத்தை பரவச்செய்தல்வேண்டும். அவ்விதத் தத்துவத்தை பரவச்செய்வதில் மிக அத்தியாவசியமானது யாதெனில் மக்களைத் தமது தற்போதைய நிலையை உணரச்செய்து தங்களுடைய விதியைத் தாமே பொறுப்பேற்கச் செய்வதாகும் இவ்விதம் தம்மைத்தாம் உணரச் செய்து அதன் காரணமாக உதயமாகும் தத்துவமே அவர்கள் ஆக்கும் சக்தியை தேசிய பொருளாதார முன்னேற்றப்பாதையில் முதல் அடி எடுத்து வைக்கும் நடிக்கையாகும்.

வவனியா மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்திக்கு விசேடமாக கிருஷிக அபிவிருத்திக்குத் தாராளமான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இயற்கை வளமுள்ள பண்படுத்தக்கூடிய நிலப்பரப்பு ஏராளமாக உண்டு. இவை செய்கை படுத்தப்படாமலோ, அல்லது மிகக்குறைவாகச் செய்கை படுத்தப்பட்டோ உள்ளன. உபஉணவுப் பொருட்கள் உற்பத்திசெய்வதற்கு இவை மிகச்சிறந்தவை என்பதாக ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தியுள்ளன. ஆகவே தற்போதைய கிருஷிக முன்னேற்றத்திட்டத்திலுள்ள குறிக்கோளை அடைவதற்கு இம்மாவட்டம் போதியமுறையில்பங்குபற்றமுடியும். கட்டாயமாகப் பங்குபற்ற வேண்டும். என்றாலும் தாங்கள் இத்திட்டத்திற்கு உதவியாக பயன்படுத்துவதற்கு மக்களுக்கு உணர்த்துவதிலும் அறிமுகப்படுத்துவதிம் மிக அவசியமாகச்செயல் புரியவேண்டும். இந்த உணர்ச்சி இல்லாவிடில் அரசாங்கத்தின் எந்த முயற்சியும் பூரண வெற்றியைத் தரமாட்டாது.

# நாட்டின் சுபிட்சத்திற்கு கூட்டுறவு ஒரு திறவுகோல்

சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவைக் கொண்டாடும் இத் தருணத்தில் இலங்கைக் கூட்டுறவு இயக்கம் நாட்டின் பொருளாதார சுபிட்சத்துக்கு ஆற்றிய பங்கை நினைவு கூடுவது மிக்கபொருத்தமுடையதாகும். கிராம மக்களின் பொருளாதார அபிவிருத்தியில் கடந்த அரை நூற்றாண்டுக்குமேல் கூட்டுறவு இயக்கம் ஆற்றிய தொண்டு அளப்பரியது. காலத்திற்கேற்ற முறையில் மாற்றமடைந்து வளர்ந்த நம்நாட்டு கூட்டுறவு இயக்கம் இன்றுநாட்டின் பொருளாதார விருத்திக்கு முக்கிய பணியைச் செய்கின்றது.

### சுயதேவைக்கு உதவிபுரிகிறது

இன்றைய பொருளாதார அமைப்பில் அதிமுக்கியமாகத் தேவைப்படும் கடன் வசதியை உரிய நேரத்தில் அங்கத்தவர்களுக்குஅளித்து நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி, சுயதேவையைப் பூர்த்தி செய்ய கூட்டுறவு உதவி ரிபுகின்றது. நிறைவு, சுபிட்சம் ஆகியவற்றின்கதவுகளைத் திறக்கக்கூடிய அதிசயச்சாவி கூட்டுறவே. இதனால்தான் மனிதகுலமாணிக்கம், மறைந்த பாரதத்தலைவர் திரு. ஜவர்ஹலால்நேரு "நாட்டின் சுபிட்சத்திற்கு கூட்டுறவுஒரு திறவுகோல்" என்றார்.

### கூட்டுறவு இயக்கத்தின் திறக்கோள்

தரகர்களையும் வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களையும் அகற்றி அங்கத்தவர் தமது சேவையை தாமே செய்து விவசாய விருத்தியையும் கைத்தொழில் விருத்தியையும் ஏற்படுத்த கூட்டுறவு உதவி புரிகின்றது. கூட்டுறவில் இன்று இருக்கும் குறைபாடுகளை நீக்கி, மலிந்திருக்கும் களவுகளை அகற்றி அரசியல் மத தலையீடுகளை சின்னபின்னமாக சிதறடித்தால் நாட்டு மக்களுக்குகூட்டுறவு இன்னும் அதிகம் உதவ முடியும். மக்களின் பொது நலனே கூட்டுறவு இயக்கத்தின் குறிக்கோளாக வேண்டும்.

கமத்தொழிலாளர், கைத்தொழிலாளர் ஆகியோர்பல நோக்குக் கூட்டுறவுச்சமிதியில் அங்கத்தவராகச்சேரும்படி வேண்டப்படுகின்றனர். அங்கத்தவர்கள் தமது கடமையையும், உரிமையையும் உணர்ந்து செயலாற்றின் இப்புனிதத்தன்மைவாய்ந்த இயக்கம் நிலைபெற்று பொருளாதாரசேவை செய்யும் என்பது துணிபு.

—"வவனியா மாவட்ட கூட்டுறவுச் சமாசம

## நாடும் நடப்பும்

பசுவைக்காணாது தவிக்கும் கன்றைப் போல 'பஸ்'களைக் காணாது தவிக்கும்பிரயாணிகளை யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில்தான் காண முடியும். இரட்டைத்தட்டு பஸ்கள் வந்தாலென்ன, ஒற்றைத்தட்டு பஸ்கள் இருந்தாலென்ன யாழ்ப்பாணப் பகுதிப் பிரயாணிகளுக்கு பஸ் பிரயாணம் தீராத பிரச்னை.

சிறிய பஸ்கள் வருவதற்குத் தடையிருப்பதால்தான் யாழ்ப்பாணத்தில் பஸ் பற்றாக்குறையாக இருக்கிறதென்று கூறினார்கள். இன்றும் ஏன் இந்த அவலநிலை.

ஃ ஃ ஃ

"ஐயா! 'பசு' வருமா?" என்று 'பசு'வுக்காகக்காத்து நின்று அலுத்துப்போன ஒரு பிரயாணி கேட்கிறார். "வரும்" என்று பதிலளிக்கிறார் 'டைம்கீப்பர்' அவர் என்செய்வார்! பாவம்! 'வரும்' என்று மரியாதையாக ஆறுதல் வார்த்தையாவது கூறுகிறாரே! அது போதாதா!

பஸ் ஓடவேண்டிய நேர அட்டவணையைப் பார்த்து 3-15 க்குப் 'பஸ்' வரும் என்கிறார். 5-15-க்கு வரும் என்றும் அவர் கூறுகிறார். அது அவரதுவேலை. 5-15க்கு புறப்படவேண்டிய பஸ் தனது பிரயாணத்தை முடித்துக்கொண்டு திரும்பி வராமல்விட்டால் அநேகமாகஅது திரும்பிவராமல்வழியிலேயே படுத்துவிடுவது வழக்கம்) 5-15க்கு புறப்படவேண்டிய பஸ் இருக்காது. 5-30, 5-45 ஆனாலும் அதற்குப் பதிலாக வேறு பஸ் ஒழுங்கு செய்யும் சக்தியோ, அதிகாரமோ 'டைம்கீப்பருக்கு' இருக்காது. அவர் அதைப் பற்றிக் கவலைப்படுவதாகவும் தெரியாது அவரிடம் 'பஸ்' வருமா?' என்று மீண்டும் கேட்டால் 'பஸ் வரும்' என்றுதான் பதிலளிப்பார். 5-15 பஸ் வரவில்லையானால் 6-15 பஸ்தான், அதுவுமில்லையானால் 7-15 பஸ்தான்!

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது போதிய பஸ்கள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். பஸ்கள் இருக்கத்தான் செல்கின்றன. எத்தனை பஸ்கள் தனது பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் வழியிலேயே படுத்துவிடுகின்றன என்பது யாருக்குத் தெரியும்.

பஸ் பிரயாணிகளின் பிரச்னை யாழ்ப்பாணத்தில் என்றுதான் தீருமோ!

ஃ ஃ ஃ

'பஸ் இருக்கட்டும் ஐயா, பிரயாணிகளின் பண்புகூட வரவரக்குறைந்துவிட்டதே' என்று ஒருவர் கவலைப்பட்டார். "ஏன், என்ன விஷயம்?" என்றேன்.

"மூந்தாநாள் மாலை நான் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்தேன். பஸ்ஸில் ஜனக்கூட்டம் தாங்காமல் நிற்பதற்குக்கூட இடமில்லை. கைக்குழந்தைகளுடன் பெண்களும் இருக்க இடமின்றி நின்று பிரயாணம் செய்தனர். ஆசனங்களில் அமர்ந்திருந்த தடிப்பயல்கள் ஒருவர்கூட எழுந்து இடம் கொடுக்கவில்லை. இதுதானா பண்பு" என்று அடித்து முழக்கினார் அவர்.

'நீர்எழுந்துஇடம்கொடுத்தீரா?' என்று கேட்டேன். எனக்கு அருகில் இருந்தவர் நான் எழுந்து இடம் கொடுப்பதற்கே இடம் விடவில்லை. அழுதுகொண்டு நின்ற ஒருபிள்ளையை எடுத்து மடியில் வைத்தேன். அதன் தலையிலிருந்த எண்ணெய் என்சேட்டைஅழுக்காக்கிவிட்டதுஎன்றார் அவர்.

'பஸ்நிலையத்தில் பலமணி நேரம் தவம்கிடந்து பஸ்களில் இடம்பிடித்தவர்கள்,

(4-ம் கலம்பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

காலவலிதிர உட்கார்ந்திருப்பார்களா? பெண்களுக்கு இடம் கொடுக்கவேண்டுமென்ற பண்பைப்பற்றி நினைப்பார்களா?' என்று அவரே அனுபவத்தில்உணர்ந்ததைச் சொல்லிவிட்டு புறப்பட்டார்

யாரை நோவது, யார்க் கெடுத்துரைப்பது

— ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வவனியா மாவட்ட அபிவிருத்தி பொருட்காட்சி மலர்

# வவனியாவில் வளமுள்ள விவசாய விருத்தி

(தா. சிவசிதம்பரம் வவனியா எம். பி.)

இலங்கையிலே விவசாயத் துறையில் சரித்திரகாலந் தொடங்கி முன்னணியில் நிற்கும் வவனியாத் தொகுதியில் நடைபெறும் விவசாய கைத்தொழில், சமூகஅபிவிருத்திப் பொருட்காட்சியின் குறிக்கோள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

இலங்கை சுதந்திரமடைந்த 1948-ம் ஆண்டில் 72 லட்சத்து 50 ஆயிரமாக இருந்த ஜனத்தொகை 1966-ல் 1 கோடி 20 லட்சமாக அதிகரித்துள்ளது. ஏறக்குறைய ஆண்டிற்கு 25 ஆயிரமாகப் பெருகிவந்துள்ளது. இதேவேளையில் இந்நாட்டின் உணவுஉற்பத்தித் தேவையின் அரைப் பங்கையேனும் பூர்த்தியாக்காத நிலையில் இன்று இருக்கின்றது. சனத்தொகை பெருகும் வேகத்திற்கு எமது நாட்டின் உணவு உற்பத்தியும் உயரவேண்டும். அன்றேல் இலங்கையின் பொருளாதாரத்தின், முக்கிய அநுகூலமான ஏற்றுமதிப் பொருட்களால் எமது நாட்டிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு மூலதனம் முழுவதையும் எமது உணவிற்கே நாம் செலவிடும் நிலை மாறாது. பிறநாடுகளிலும் கையேந்தி இரந்து உண்டு வாழும் இன்றைய இழிநிலை என்றும் தீராது. அந்நிய நாடுகளிடம் இரந்து உயிர் வாழும் இன்றை இலங்கைச் சந்ததியினராகிய நாம் எதிர்காலச் சந்ததியினரை எமது உணவு உடை இவற்றிற்காகத் தினம் தினம் அடகுவைத்துஇழி நிலைக்குக் கொண்டுவருகின்றோம்.

எமதுநாட்டிற்குக் கிடைக்கும் வெளிநாட்டு மூலதனத்தைக்கொண்டு பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும் எமது நாட்டின் உணவு, உடை போன்ற சுயதேவையைப் பூர்த்திசெய்வதற்கும்



அத்தியாவசியமான தொழிற்சாலைகள் நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற ஆக்கவேலைகளை உருவாக்க வேண்டுமாயின், நாட்டின் உணவு உற்பத்தி பெருக வேண்டியது எவ்வளவு முக்கியமும் அவசியமும் என்பது தெளிவாகின்றது. சீர்திருந்திய, விஞ்ஞானமுறை விவசாயம் எத்துணை சிறந்ததென்பது புலனாகிறது. ஏக்கருக்குச் சராசரி 32—33 புசல்விளையும்எமதுநிலம்50-65புசல்வரை விளைவுதரச் செய்யலாம் என்பதை எவரும்மறுக்க முடியாது.

## நீர்ப்பாசன வசதி

இலங்கையின் உஷ்ண வலயத்திலுள்ள நிலப்பரப்பு ஏறக்குறைய 12 கோடி ஏக்கர், 5,60,000 ஏக்கர் நிலம் மாத்திரந்தான் இன்று மாரிவாரியாகவோ நீர்ப் பாய்ச்சல்மூலமோ செய்கைபண்ணப்படுகின்றது. நீர்ப்பாசன இலாகாவில் ஆராய்ச்சியின்படி 9,60,000 ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத் திட்டங்களை புனருத்தாரணம் செய்வதினால் நன்செய்நிலமாக்க முடியுமெனக் கருத்து வலுவடைகின்றது. விவசாயத்துறையில் முன்னேறியஅமெரிக்கா, அவுஸ்திரேலியா, யப்பான், இஸ்ரவேல் போன்ற நாடுகளில் உபயோகிக்கப்படும் நவீன சாதனங்கள் உருவாக்கப்பெறின் மேற்கொண்டும் 1,50,000 ஏக்கர்நிலம் உப உணவு உற்பத்திச் செய்கைக்குச் சகல வாய்ப்பும் பொருந்திய நிலமாக உஷ்ண வலயத்தில் மாறும். இந்த உண்மையை உணரும்பொழுதுதான் குழாய்கிணறு, மலை நீரூற்று அருவிகளை உஷ்ண வலயத்திற்குத் திருப்புதல், மின்சார சக்தியினால் நீர் இறைப்புச் சாதனங்களை இயக்குதல் போன்றவை எமக்கு எவ்வளவுமுக்கியம் வாய்ந்தவை என்பது தொனிக்கின்றது இவற்றை நாம் பெற வேண்டுமானால்- எமது நாட்டிற் பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவேண்டுமானால்-இன்று உணவு வாங்குவதற்குச் செலவிடப்படும் வெளிநாட்டுச் செலாவணியும் மூலதனம் மேற்கூறிய ஆக்கத்துறையின் அத்தியாவசியமாகிய மூலப் பொருள்களுக்குச் செலவு செய்யப்படல் வேண்டும். இத்துறையில் தேசிய அரசாங்கம் இஸ்ரவேல் நாட்டிலிருந்து குழாய்க் கிணறுகள், நீர் இறைக்கும் நவீன சாதனங்கள் பெறுவதில் எடுக்கும் பெருமுயற்சியும், மகாவலி கங்கையை வடக்கே திருப்புவதற்கு தொடர்ந்துஎடுத்து வரும் நடவடிக்கைகளும் பாராட்டத்தக்கவை.

## 6 ஆண்டுகளில் முன்னேற்றம்

எமது வவனியாத் தொகுதியைப் பொறுத்தவரையில் நெற்செய்கையும், நிலக்கடலை, வெங்காயம், மிளகாய் போன்ற உபஉணவு உற்பத்தியும் கடந்த ஆறு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெற்றுள்ளது. ஆயினும்6,40,000 ஏக்கர் வளமுள்ள நிலப்பரப்புக் கொண்டதும் நூற்றுக்கணக்கான நீர்ப்பாசனக் குளங்களைக் கொண்டதும், விவசாயத்தையே தமது ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்கின்ற மக்கள் நிறைந்ததுமாகிய வவனியாத் தொகுதி; விவசா

(6-ம் பக்கம்பார்க்க)



பிரதமரின் செய்தி

## மக்கள் சாதிக்கவேண்டியது என்ன?

1966-ம் வருட வவனியா அபிவிருத்திப் பொருட்காட்சி நடைபெறும் இச் சந்தர்ப்பத்தில் ஓர் நற்செய்தியை நான் அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவ்வித பொருட்காட்சிகள் விவசாய, சமூக, கைத்தொழிற்றுறைகளில் அடைந்த முன்னேற்றங்களையும் இன்னமும் அடையவேண்டிய சாதனை

(9-ம் பக்கம்பார்க்க)



மகாதேசாதிபதியின்வாழ்த்து

## பொருட்காட்சி அளிக்கும் சந்தர்ப்பம

பொருட்காட்சிகள் இலட்சிய ரீதியாக அடைந்த முன்னேற்றத்தை விளம்பரப் படுத்துவதற்குகந்த சந்தர்ப்பத்தை அளிப்பதற்கு மட்டுமன்றி, அம்முன்னேற்றத்தின் அளவை நிர்ணயிப்பதற்கும் உதவுகின்றது. கூரிய புத்தியுடன் பொருட்காட்சிச் சாலைகளில் பார்வைக்கு வைக்கப்படும்

(9-ம் பக்கம் பார்க்க)

## உணவு அமைச்சரின் வாழ்த்துச் செய்தி


வவுனியா மாவட்டம் உப உணவு உற்பத்தியில் மிகவும் பிரதான இடத்தை வகிக்கிறது. இந்நாட்டின் உற்பத்தியில் பெரும்பகுதி செத்தல் மிளகாயையும் சின்ன வெண்காயத்தையும் நிலக்கடலையையும் வவுனியா மாவட்டத்திலுள்ள விவசாயிகளே உற்பத்தி செய்கின்றனர். இலங்கையில் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பம்பாய் வெண்காயப் பயிர்ச் செய்கையை சோதனை கிரியை மூலம் பரீட்சித்துப் பார்த்தபொழுது வவுனியா மாவட்டத்தில் திருப்திகரமான முறையில் சாகுபடி செய்யலாம் என அறியப்படுகிறது. எனவே வருங்காலத்தில் இப்பயிர்ச் செய்கையில் பிரத்தியேக ஊக்கமும் கவனமும் செலுத்தும்படி நான் வவுனியா மாவட்ட கமக்காரர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்ட முத்துஐயன் கட்டுக்குளத்தின் மூலம் 12,000 ஏக்கர் நிலப் பரப்பில் உணவுற்பத்திப் பொருட்கள் பயிர்செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நிலப்பரப்பில் பெருமளவிற்கு உணவுற்பத்தி பயிர் செய்வதற்குத் தேவையான ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன. இத்தகைய ஒழுங்குகள் பெரும் நன்மையை வவுனியா மாவட்ட மக்களுக்கு அளிக்கும் என்பதே எனது அசையாத நம்பிக்கை.

இப் பொருட் காட்சியிலிருந்து விவசாயிகளின் நன்மைகருதி அரசாங்கம் எவ்வித உதவிகளைச்செய்து வருகின்றது என்பதை அவர்கள் அறிவார்கள் என நம்புகிறேன்.

எம். டி. பண்டா
விவசாய, உணவு அமைச்சர்



மஸி-பேர்குஸனின் நவ்ன தயாரிப்புகள்



M.F. 135

மஸி-பேர்குஸன் 135

- ஒரு 3 சிலிண்டர் நேரடி இழுவை பேர்கின்ஸ் டீசல் எஞ்ஜின் 45.5.B.H.P.
- "புதிய எம்.எப். மோஸ்தர். இயக்குபவருக்கு சௌகரியத்தையும், வசதிகளையும், பாதுகாப்பையும் அளிப்பது.
- எந்த ட்ராக்டரிலும் இல்லாது முதன் முதல் இணைக்கப்பட்ட எரிபொருள் கேஸ் உட்பட சம்பூரணமான உபகரணங்கள் கொண்டது.
- சுத்தமான எரிபொருள் அளிப்பதை உறுதிசெய்ய எரிபொருள் பில்டர் அக்குளோமீட்டர் இணைக்கப்பட்டுள்ளது.
- புதிய அமுக்க சக்தி கட்டுப்பாட்டுடன் உலகின் அதி உன்னத ஹைட்ரோலிக் முறை இணைக்கப்பட்டது.
- அதி உன்னத இயக்க சக்தி/நிறை விகிதாசாரம்.



M.F. 130

மஸி-பேர்குஸன் 130

- ஒரு 4/107 - 30 குதிரைப்பவர் டீசல எஞ்ஜின்
- "புதிய எம்.எப்" மோஸ்தர். இயக்குபவருக்கு சௌகரியத்தையும், வசதிகளையும், பாதுகாப்பையும் அளிப்பது.
- எட்டு ஸ்பீட் சைனேகுரோமெஸ் கியர் பொக்ஸுகள்.
- மிக நவீன ஒரு லிவர் பேர்குஸன் சிஸ்டம் ஹைட்ரோலிக்.
- அதி உன்னத இணைப்பு பூட்டு.
- கனக்குறைவான ட்ராக்டர் நேர்த்தியான இயக்க சக்தி/நிறை விகிதாசாரம்.
- முற்றிலும் சீல் வைக்கப்பட்ட பிரேக்குகள்.

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்

விவசாய பகுதி

கொழும்பு, அம்பாறை, பரந்தன், வவுனியா, குருணாகலை



## தர்மலிங்கம் அரிசி ஆலை

எங்கள் ஆலையில்

நெல் குற்றியும், அரிசி, மிளகாய், உழுந்து

அரைத்தும் கொடுக்கப்படும்

குறைந்தகட்டணம் திருப்தியான வேலை

ஒருமுறை விஜயம்செய்து பாருங்கள்.

த. தர்மலிங்கம்

அரிசி — மாவு ஆலை

மில்வீதி, :: :: வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவனியாவில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்துறையில் முன்னேற வேண்டும். இம்முன்னேற்றம் விவசாயிகளின் விழிப்புணர்ச்சியிலும் மறுமலர்ச்சியிலும் அரசாங்கம் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய அனுசரணையிலும் தங்கியுள்ளது.

இன்று நாம் செய்யும் விவசாயம் எமது சாதாரண வாழ்க்கைச் செலவிற்கும் ஜீவனோபாயத்திற்கும் போதுமென்ற மனப்பான்மை நீங்கி விவசாயந்தான் ஏனைய எந்தத் தொழில்களிலும் சிறந்த உண்மையை உணர்ந்து விவசாயத்தையே எமது தொழிலாக மாற்ற வேண்டும். ஐக்கிய கூட்டுறவு இயக்கங்களின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்கும் பண முதலீட்டு வாய்ப்புகளை "அவசிக்கு ஏற்றநிதிஉதவி" என்ற நிலை மாறி விவசாயத் தொழில் முன்னேற்றத்திற்குக்கிடைக்கும் நிதிவசதியெனக் கருதிப்பயன்படுத்த வேண்டும். பண்டைக் காலந் தொடங்கிப் பரம்பரையாக நாம் செய்துவந்த நெல் உற்பத்தியுடன் மாத்திரம் நில்லாது, தனிந்து மலிந்து கிடக்கும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, உப உணவு உற்பத்திச் செய்கை, கால்நடை வளர்ப்பு இவைகளில் நாம் ஈடுபடல் வேண்டும். "கொலோனியல்" ஆட்சியினர் தமது நீடித்த ஆட்சியின் சுயநலம் கருதி எமக்குத் தந்துபோன அடிமைத் தொழில் மோகத்தை நீக்கி எமது இளைஞர்கள், வள்ளுவனும் ஔவையும் எமக்கு வழிகாட்டிச் சென்ற விவசாயந்தான் மேலானது-ஒப்பற்றது என்ற ஒப்பரிய உண்மையை உணர்ந்து தொழிற்படல் வேண்டும்; பெருமை கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் விவசாய முன்னேற்றத்துக்கென அரசாங்கம் வகுக்கும் திட்டங்கள் புத்தகங்களிலும் காகிதக் கோவைகளிலும் தங்கிநிற்காது காணிப்பங்கீடு, இதர அரசாங்க உதவிகள், விஞ்ஞான மதிநுட்பஉதவிகள் ஏர் பிடிக்கும் ஏழை உழவனுக்கு என்றும் விரைவாகவும், விரிவாகவும் கிடைத்தல் வேண்டும். விவசாயப் பகுதியினர் மேற்கொள்ளும் ஆராய்ச்சிகளும் போதனா முறைகளும் ஒவ்வொரு விவசாயியும் கண்டு பின்பற்றக்கூடிய சாதனா முறையில் ஆக்காங்கு வழிகாட்டியாக இயங்க வேண்டும். இந்நாட்டின் கல்வித்திட்டத்தின் அடிப்படைக் கொள்கை மாற்றப்பட்டுத் தொழிற்கல்விக்கும் விவசாயக் கல்விக்கும் முதன்மையும் முக்கியத்துவமும் கொடுபடல் வேண்டும்.


**வவனியா மாவட்ட கூட்டுறவு வங்கி**

பதிவு இல.. வி 226, திகதி —20—5—61

| | | |
|---|---|---|
| அறவிட்ட பங்கு | ரூபா | 58, 296-00 |
| சட்டரீதி அடக்கப்பணம் | | 19, 575-61 |
| மற்றும் அடக்கப்பணம் | | 50, 877-64 |
| சேமம் | | 187, 449-73 |

நிலையான வைப்புப் பணத்திற்கு 3 வீத வட்டி கொடுக்கப்படும்
அங்க உத்தியோகத்தரின் பிணைப்பணத்திற்கு 3 வீத வட்டி கொடுக்கப்படும்
இவை வருட வீதம் புதுப்பிக்கப்படத் தேவையில்லை
ஒரு வருடத்திற்குமுன் அறிவித்தல் கொடுத்தால் எடுக்கலாம்
சேமிப்புப் பணத்திற்கு 2 வீத வட்டி கொடுக்கப்படும்

க. சரவணமுத்து
கௌரவ காரியதரிசி



**பகவதி ஹோட்டல்**

பசார் வீதி, வவனியா.

பலகாரம், சாப்பாட்டுச்சாமான்
திறமையுடன் கொடுக்கப்படும்
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

S. V. சுப்பிரமணியம்



**சு. சண்முகம், கொறப்பத்தாலை வீதி, வவுனியா**

குறைந்த வட்டியில் நகை அடைவுபிடிக்கப்படுகின்றன

உங்களின் தேவையே
எங்களின் சேவை

எம்மிடம் பலசரக்குகளும், சாய்ப்புச்சாமான்களும்
சில்லறையாகவும், மொத்தமாகவும்
சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**



**நவநாகரிக முறையில் குறித்த நேரத்தில்**

சகலவிதமான நகைகளும்
ஆடருக்கும் உடனும் செய்து கொடுக்கப்படும்.
ஒருமுறை விஜயம் செய்யவும் குறைந்த செலவு நவீன வேலை, நம்பிக்கை உள்ளது

**ஆபரண மாளிகை**

**க. வல்லிபுரம் அன் கோ**

அடைவு பிடிப்பவர்கள்

வவனியா — அனுராதபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கண்ணோட்டம்

# விவசாயத்துக்கு ஏற்ற செழிப்பு மண் வவுனியாவிலே இருக்கிறது

வவுனியா மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு 165 கோடி புசல் நெல், 50,000 அந்தர் சின்னவெங்காயம், 6000 அந்தர் நிலக்கடலை, 5000 அந்தர் காய்மிளகாயும் குறைந்த அளவுகளில் செத்தல் மிளகாய், பம்பாய் வெங்காயம் உருளைக்கிழங்கு ஆகியனவும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இம்மாவட்டம் 1431 சதுரமைல் (916,160 ஏக்கர்) அளவுள்ள பிரதேசமாயிருந்தும் இப்பரப்பில் ஏழு வீதம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டு விவசாயத்திற்குப் பாவிக்கப்படுகிறது. இச்சிறுபகுதியிலேயே வன்னி நகரின் சுவாத்தியக் குறைபாடுகளிடையே இப் பிரதேசத்திற்குப் பெயர் போன சின்னவெங்காயம், மிளகாய், நிலக்கடலை முதலியன உற்பத்தி செய்யப்படுகிறது.

## செழிப்பு மண்

யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள மண்வகையில் செழிப்பு மிக்கமண் இப்பகுதியிலேயேயுள்ளது. ஓரளவு செம்மையான செய்கைமுறைகளுடன் இப்பிரதேச வயல்களில் ஏக்கர் ஒன்றுக்கு 75 புசல் நெல் இலகுவில் விளைகிறது. தச்சன்குளம், கோவிற்குளம், பண்டாரிக்குளம், நெடுங்கேணி, தச்ச அடம்பன் முதலிய இடங்களில் காணப்படும் செழுமையான சின்னவெங்காயம், மிளகாய் முதலியனவற்றைப் பார்வையிடும் ஒருவருக்கு இப்பிரதேசமண் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சிறந்த தோட்ட மண்ணைவிடச் சாலச் சிறந்தது எனச் சான்று பகரும்.

இம்மாவட்டக் கரையோரப் பகுதிகளிலுள்ள மணற்பாங்கான நிலம் தென்னை, வாழை முதலியன செய்கை பண்ணுவதற்கு சாலச்சிறந்தது. நீர்ப்பாசனம் இல்லாது தென்னை வளர்கின்றது. அதனிடையே உண்டு பண்ணப்படும் வாழை காடு வெட்டும் செலவைக்கொடுக்கிறது.

## வருங்கால அபிவிருத்தி

இப்பிரதேசத்தின் வருங்கால விவசாய முன்னேற்றமென்ன? இப்பிரதேச மூலதனங்களுக்கமைய எவ்வெவ்வித விவசாய அபிவிருத்தி வேலைகளைச் சிபார்சு செய்யலாம்? என்பன இப்பகுதி மக்கள் மனதில் எழக்கூடிய சில வினாக்கள்!

நெற்காணிகளைப் பற்றிய நிலை, குளங்கள் நீர்நிலைகள் முதலியன திருத்தப்படும் வேகத்திலேயே தங்கியுள்ளன. திருத்தக்கூடியமேட்டு நிலங்கள் அதிகம் உண்டு. பெரும்பாலோர் மேட்டு நிலம் என்றவுடன் சிறு துண்டுகளில் பயிரிடப்படும் சின்ன வெங்காயம், மிளகாய், காய்கறிகள் முதலியவற்றையே சிந்திக்கிறோம். இவை கீழ்த்தர வகுப்பினருக்கு உகந்ததேயொழிய மத்தியதர வகுப்பினருக்கு உகந்ததெனக்கூற இயலாது.

மத்தியதர வகுப்பினர் மண் உகந்ததாயிருப்பின் தென்னை அல்லது மர முந்திரிகை பயிரிடலாம். இதுகாலவரை இலங்கையில் கையாளப்படாத முறையில் (யந்திரமயமாக) சோளம், நிலக்கடலை, உருளைக்கிழங்கு முதலியன அதிக அளவு ஏக்கரில் குறைந்த அளவு கூலியாட்களுடன் வான்பயிராகச் செய்கை பண்ணலாம். இவ்விதச் செய்கையிலுள்ள ஆதாயமென்ன? ஏக்கர் ஒன்றுக்குப் புகையிலை, வெங்காயம், மிளகாய் முதலியன 500 ரூபாவரை லாபம் கொடுக்கக்கூடியன. ஆனால் இப்பயிர்களின் செய்கைக்கு அதிக அளவு கூலி ஆட்கள் தேவைப்படுகின்றனர். இது மாத்திரமல்லாது ஆட்களைப் பிடிப்பதும் கஷ்டமாயிருக்கிறது. இப்பயிர்களுக்குத் தேவையான நீர்ப்பாசன வசதியும் இப்பகுதியில் குறைவாகவே இருக்கிறது. ஆகவே மழை நீரோடு விளையக்கூடிய யந்திரமயமாகச் செய்கை பண்ணக்கூடிய பயிர்களையே தெரிவுசெய்ய வேண்டியது அவசியமாகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் சோளம் மேற்கூறிய செய்கை முறையின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு 150 புசல் விளைகின்றது. இலங்கையில் நிலக்கடலை ஏக்கருக்கு 12 அந்தரும், ஏக்கருக்கு உருளைக்கிழங்கு 4 தொன்னும் விளைகின்றது சிறந்த அளவு விளைவு தரும் இனங்களைப் பயிரிடுவதனாலும், உகந்த அளவு வளமாக்கிகளைப் பிரயோகிப்பதாலும் நெற்செய்கையிலும் பார்க்க இப்பயிர்கள் அதிக இலாபத்தைத் தரவல்லன ஆகவே இதற்கு வேண்டிய உபகரணங்கள்— விதைப்பு, களை அகற்றுதல், ஊடுசாகுபடி, அறுவடை, பதப்படுத்துதல் — கூடிய விரைவில் இலங்கையில் தயார் செய்யவேண்டியுள்ளது. காலக்கிரமத்தில் இவை சாத்தியமாகும்.

குடியான கமக்காரன் கையாளும் செய்கை முறைகளே மத்திய, மேல்தர வகுப்பினருக்கும் உகந்தது என எண்ணுவதுண்டு. எல்லாச் செய்கைகளும் உகந்ததல்ல. அதிக அளவு கூலியாட்கள் தேவைப்படும் பயிர்கள் குடியான கமக்காரனுக்கே உகந்தது. மனித சக்தி குறைவாக, யந்திரமயமாகச் செய்கைபண்ணக்கூடிய பயிர்களே விசாலமான ஏக்கர்களில் பயிரிட உகந்தவை.

## மந்தைவளர்ப்பு


மந்தை வளர்ப்பும் ஒரு உகந்த திட்டம். எங்கள் வயல் ஓரங்களிலும் பாதையோரங்களிலும் அதிகஅளவு மந்தைகள்—உள்ளூர் இனங்கள் அலைவதைக் காண்கிறோம். ஒருவித செலவுமின்றி இவை வளர்ந்து தம்மினத்தைப் பெருக்குகின்றன. இதே ரீதியில் திட்டமிடப்

(8-ம் பக்கம் பார்க்க)


சிறந்தஉணவுகள்
ருசிகரமான சிற்றுண்டிகள்
ஆடர்களுக்குத் தொகையாகவும் சில்லறையாகவும்
உடன்செய்து கொடுக்கப்படும்
ஞானம்ஸ் கபே
உரிமையாளர்: சி. தம்பிராசா
கந்தசுவாமிகோயிலடி, :: வவுனியா.

கமக்காரர் விரும்பி வாங்கும் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்

பெக்சன்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30 | அடி | அல்கதீன் | பைப் 2'' | ரூபா | 65-00 |
| 30 | ,, | ரப்பர் | பைப் 2'' | ,, | 225-00 |
| 25 | ,, | ரப்பர் | பைப் 2'' | ,, | 200-00 |



பெக்சன் யூனியர் 2''
ரூபா 1,175 | -

பெக்சன் சீனியர் 2''
ரூபா 1600 | -

— வடபகுதியில் ஏக விநியோகஸ்தர்கள் —

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம், ★ வவுனியா

Prices effective from 20-8-1966

20-8-1966 தொடக்கம் மேற்படி விலைகள் அமுலிலிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்துக்கு ஏற்ற செழிப்பு மண் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ட்ட ஆதாயகரமானவால், இறைச்சி இழுவை மிருகங்களை வளர்க்கலாம்.

முல்லைத்தீவிற்குச் செல்லும் வழியில் முள்ளியவளைக்கு அருகாமையில் செம்மையான மஞ்சள்நிற ஆழமான இறவல் அற்ற இ வாட்டி மண் காணப்படுகிறது. இம் மண்ணில் தென்னை, வாழை, மாமரம் போன்றவை செழித்து வளரும். இப்பகுதியிலுள்ள ஆழமான கிணறுகளிலிருந்து நீர் இறைக்கும் வசதி இருக்குமாயின் அதிக அளவு இலாபம் தரக்கூடிய தோடை செய்கை பண்ணலாம். தற்பொழுது நடைபெறும் ஆழ்படை நீர் ஆராய்ச்சிகள் சித்தியெய்துமாயிருந்தால் இப்பகுதி வவனியா மாவட்டத்தின் தோட்டப்பிரதேசமாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

இன்னொரு இலாபகரமான முயற்சி எருமைப்பால், தயிர் முதலியன உற்பத்தி செய்தல். குளங்களும், அறுவடையின் பின் வயல்களும் எருமைகளுக்கு நல்ல மேய்ச்சல் நிலமாக அமையும். தற்போது விவசாய இலாகாவினால் கொடுக்கப்படும் எருமை இனங்களிலிருந்து உணவூட்டும் செலவின்றியே அதிக பால் பெறலாம். தினமும் கிடைக்கும் பாலைக் கொழும்பு போன்ற பெரிய நகரங்களுக்கு அனுப்பித் தயிர் தயாரிப்பதால் அதிக லாபம் அடையலாம்.

## முந்திரிகைச் செய்கை

முல்லைத்தீவுக்கு வடக்கே உள்ள மணற்பூமிகளில் முந்திரிகை மிகச்சிறப்பாக வளரக்கூடிய ஒரு பயிர் இது. பராமரிப்புச் செலவு குறைந்த பயிர் மட்டுமல்லாது ஏக்கர் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 200ரூபா வருமானம் தரவல்லது.

## அரசாங்க உதவிகள்

விவசாயத்தைப் பெருக்குவதற்கு அரசாங்கம் பல முறைகளிலும் ஊக்கமளிக்கிறது. படித்த வாலிபர்களை விவசாயத்திட்டங்களில் குடியேற்றுவதில் அரசாங்கம் கூடிய சிரத்தை எடுக்கிறது. இப்படியான இளைஞர் குடியேற்றத்திட்டமொன்று வவனியாப் பகுதியிலுள்ள முத்தையன் கட்டுக்குளம் என்னும் இடத்தில் மிக அண்மையில் தொடங்கி இருக்கிறது. ஒட்டிசுட்டானிலிருந்து வடக்கே 5 மைல் தூரத்தேயுள்ள இக்குளம் 1200 ஏக்கர் மேட்டு நிலத்திற்கு நீர்ப் பாய்ச்ச வல்லது. இலங்கையில் உள்ள இப்படியான திட்டங்களில் மிகப் பெரியது.

இதில் ஒரு பகுதியை இளைஞர்களுக்கு 3 ஏக்கர் வீதமும் மிகுதியைக் குடிகளுக்கு உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கெனவும் பகிர்ந்தளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கிணறுகள் வெட்டப்படுகின்ற செலவோ அல்லது கிணறுகள் வற்றுகின்ற பிரச்சினைகளோ இருப்பதற்கிடமில்லை.' இளைஞர்களுக்கு உபமானியமாகக் காடுவெட்டுதல், கட்டை பிடுங்குதல், மட்டப்படுத்துதல், வேலியடைத்தல் முதலியவற்றிற்கெனச் சிறுசிறு தொகைகள் வழங்கப்படும். இவற்றைவிட 2 வருடத்திற்கு மாதந்தோறும் சகாயச்சம்பளமும் வழங்கப்படும். தற்பொழுது இத்திட்டத்திற்கென ஒரு உழவு யந்திரமும் பெட்டியும் நன்கொடையாகக் கிடைத்திருக்கிறது. இந்த மூன்று ஏக்கரிலும் கிரமமாக உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய், வாழை முதலியன பயிரிடப்படும். ஒரு சாதாரண கமக்காரனின் வருமானத்திலிருந்து கணக்கெடுத்ததில் இந்த மூன்று ஏக்கரிலிருந்து வருடமொன்றுக்கு 2500 ரூபா வருமானம் கிடைக்குமெனத் தெரிகிறது. இப்படியான இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் பல வருங்காலத்திலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

கிழ்த்தர மக்களின் நெற்செய்கையில் ஏக்கருக்கு 70 புசலுக்கு மேற்பட்ட விளைச்சலைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்நோக்கத்திற்காக வளமாக்கிகளை உபயோகித்தல், சிறந்த விதைநெல்லைப் பாவித்தல், களைகட்டுதல் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. மேட்டுநிலம் வைத்திருப்பவர்களுக்கு கிணறு வெட்டுவதற்கு உபமானியம் வழங்கப்படுகின்றது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வளமாக்கிகள், விதைநெல், களைகட்டுதல் முதலியவற்றிற்குக் கடன் வழங்கப்படுகிறது. மேட்டுநிலம் இல்லாதோருக்கு இப்பகுதியில் விண்ணப்பித்தால் மேட்டுநிலம் கொடுக்கப்படும். நீர் இறைத்தலுக்கும் ஏற்றுக் கட்டுவதற்கும் கடன் வழங்குதல்பற்றி ஆலோசனைகள் நடைபெறுகிறது. குடிமக்களுக்கு நீர் வசதியுள்ள முத்துஐயன் கட்டிலும் ஒவ்வொருவருக்கும் 3—5 ஏக்கர்வரை காணி கிடைக்கக் கூடியதாயுள்ளது.

குடிமக்களுக்கு இப்படியான திட்டம் இருப்பதோடு விவசாய இலாகாவும் அதிக விளைவைக் கொடுக்கும் இனங்களை விருத்தி பண்ணுதல்; பயிர்களைத் தாக்கும் நோய்கள், பூச்சிகள் முதலியவற்றைக் கட்டுப்படுத்துதல், பயிர்களுக்கு ஏற்ற பசளைகளைப் பரீட்சித்தல், களைகளைக் கொல்லக்கூடிய களைகொல்லி மருந்துகளை உபயோகித்தல் முதலியவற்றில் அதிக ஊக்கத்துடன் முன்னேற்றம் அடைந்துள்ளது.

## விவசாய விஞ்ஞானம்

விவசாய விஞ்ஞானம் கடந்த 10 ஆண்டுகளில் அதிக அளவு முன்னேற்றம் அடைந்துள்ளது. யப்பான், அவுஸ்திரேலியா, ஸ்பெயின், இத்தாலி முதலிய இடங்களில் ஏக்கருக்கு 100 புசல் நெல் விளைச்சல் சர்வசாதாரணமாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவில் 10 வருடங்களுக்குமுன் ஏக்கரொன்றுக்கு ஐம்பது புசலாக இருந்த சோளப்பயிரின் விளைவு தற்போது 150 புசலாக அதிகரித்துள்ளது. சோளம் மும்மடங்கு விளைச்சல் அளிக்கிறபடியால் கோழி வளர்ப்பு, மாட்டிறைச்சி, பாற்பண்ணை பன்றிவளர்ப்பு முதலியனவும் மிக அதிகஅளவில் அதிகரித்துள்ளது. அவுஸ்திரேலியா வாழையினத்தில் கூட மணம் குணம் பருமன் முதலியவற்றில் மிகச் சிறந்த இனமொன்றை உற்பத்தி செய்துள்ளது. நீர்ப்பாசன முறைகளிலும்கூடப் புதிய முறைகள்மூலம் (விசிறல் முறை, மண்ணிற்குக் கீழே நீர்ப்பாய்ச்சுதல்) 50 வீதத்திற்கு மேற்பட்ட நீரைமீதப் படுத்தக்கூடியதான முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைமட்டுமன்றி கோழிஇனங்களிலும் 12 வாரங்களில் 4 இறாத்தல் நிறை அடையக்கூடியதான இனங்கள் அபிவிருத்திசெய்யப்பட்டுள்ளன.

புதிய கண்டுபிடிப்புகளும் முறைகளும்விவசாயிகளுக்கு நன்மை பயக்கக்கூடும் என்பதற்காகவே இந்த விவசாயப் பொருட்காட்சியை ஒழுங்கு செய்துள்ளோம். அரசாங்க இலாகாக்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்கு எவ்விதத்தில் பாடுபடுகிறார்களென்பதை விவசாயிகள் கண்டறிவதற்கும் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கிறது. எம் எல்லோரினதும் அவாவிற்கமைய இக்காட்சி எம்பிரதேச விவசாயிகளுக்கும் நன்மை பயக்குமென நம்புகிறோம்.

தமிழ், சிங்கள, ஆங்கில
உங்களது அச்சுவேலைகளுக்கு
சிறந்த இடம்
வவனியா அச்சகம்
ஹொறப்பத்தானை வீதி, வவனியா.
தொலைபேசி: 589

சூறுவளியினால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளருக்கு
முக்கிய அறிவித்தல்
அரசாங்க நிவாரணமாக வழங்க இருக்கும் யந்திரப் படகுகளுக்கு
லிற்றர் எயர் கூல்ட், வாட்டர்கூல்ட் 36/39.6 H. P.
டீசல் என்சின்கள்
இப்போ கைவசம் இருப்பதால்
என்சினுக்கென வழங்கும் அரசாங்க உதவி ரூபா 8500/–றை,
கழித்துக்கொண்டு பெறுமதியில் மிகுதியை எங்களுக்கு நேரடியாக
கொடுத்து பெறும் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உடனடியாக என்சின்களை முற்பணம் கட்டி தடைசெய்யவும்
கரிசன் லிற்றர் என்சினியரிங் லிமிட்டெட்
தபால் பெட்டி: 69, — மோர்கன் வீதி, — கொழும்பு - 2
HARRISONS LISTER ENGINEERING LTD.
P. O. Box 69, Morgan Road, Colombo - 2

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் சாதிக்க : . .

(5ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் மக்களுக்குப் புகட்டுவதில் முக்கியமாய் விளங்குகின்றன. இவ்விதம் சாதனைகளை அடைந்த பின்னர்தான் நம்நாடு பொருளாதார ஸ்திரமுடைய முன்னேற்றமடைந்த நாடுகளுடன் சமநிலையில் நிற்கமுடியும்.

அரசாங்க இலாக்காக்களினால் ஆரம்பிக்கப் பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றியடைவதனால் பெரிதளவு மக்கள் தாங்கள் சாதிக்க வேண்டியவை என்னவென்று உணர்ந்து அவற்றில் பங்குபற்றுதல் வேண்டும். அரசாங்கம் ஓர் ஐந்தாண்டு கமத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தை மிகவும் ஆர்வத்துடன் நிறைவேற்றமுனைந்துள்ளது. கமத்தொழில் செய்யக் கூடிய பரந்த பிரதேசம் வவனியா மாவட்டத்தில் உள்ளமையால் இங்கு மக்கள் இத்திட்டத்தை வெற்றிகரமாய் நிறைவேற்றுவதில் மிகமுக்கியமான பங்கு எடுத்துக்கொள்ள முடியும்.

மக்களுக்கு உபயோகமான இப்பொருட்காட்சியை ஒழுங்குசெய்த வவனியா மாவட்ட இணைப்புக்குழுவை நான் பாராட்டு

## பொருட்காட்சி அளிக்கும் சந்தர்ப்பம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் மக்களின் சிந்தனைக்கு அமைவதுடன், அவர்களுடைய முயற்சியைச் சிறப்படுத்துவதற்கும் ஏதுவாகின்றது. பலவருட அனுபவத்துடன் கூடிய இப்பொருட்காட்சி இவ்வருடத்தில் விவசாயத்துறையிலும், கைத்தொழில் துறையிலும் சிறப்புற அமையும் என்பதே எனது திடமான நம்பிக்கை.

இந்நாட்டிலே விளையக் கூடிய விவசாயப் பொருட்களினதும் கைத்தொழில் நுட்ப சாதனங்களினதும் நிலையை உயர்த்தவேண்டுமென்பது கூறற்பாலதன்று. எமது பொருளாதார நிலையை உயர்த்தவேண்டுமெனில், உப உணவுப் பொருட்களுக்காக இந்நாட்டிலிருந்து பிறநாட்டுக்குச் செல்லும் பெருந்தொகையான பணத்தைத் தடைசெய்வதவசியம். வவுனியா பிரதேசத்திலே உபஉணவுப்

வதுடன் அவர்களும், அவர்களின் முயற்சிகளும் வெற்றியடையவேண்டுமென்றும் வேண்டிக் கொள்கின்றேன்.

டட்லி சேனநாயக்கா,
பிரதம மந்திரி.

பொருட்களின் உற்பத்தி சிறப்புறுவதை அறிந்து வவுனியா பிரதேசவாசிகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவர்களுடைய முயற்சி மென்மேலும் வளரட்டும் என்று வாழ்த்துகிறேன்.

வில்லியம் கோபல்லவா
தேசாதிபதி

---

## பொருகாட்சி ஏன்?

உலகில் முன்னேற்றமடைந்துவரும் நரடுகள் எல்லாம், அவற்றின் பொருளாதார முன்னேற்றத்திலேயே முன்னேறியுள்ளன. அவ்வாறு இலங்கையும் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. பொருளாதார முன்னேற்றத்திற்குக் கருவூலமாக விளங்குபவர்கள் தொழிலாளப் பெருமக்களே. அவர்கள் வாழ்வு மேம்மடவும், ஊக்கம் அதிகரிக்கவும் உற்சாகத்துடன் செயல்படவும் போதிய ஆதரவளிப்பதே எமது கடமையாகும்.

இலங்கையில் ஒரு பகுதியான வவனியா மாவட்டத்தில் வாழும் பல்வகைத் தொழிலாளர்களின் உயர் வாழ்விற்காக, இப் பொருட்காட்சியில் பங்குபற்றிய காரியாலயங்கள் யாவும் தத்தம் காட்சிகளில் உள்ள நன்மைகளையும், பொருளாதார முன்னேற்றங்களையும் எடுத்துக்காட்டும் முறையில் அவற்றை அமைத்து அவற்றில் மக்களுக்கு நம்பிக்கையும், உற்சாகமும் ஏற்படுத்தி அவர்களைச் சிறப்பாகவும், இன்பமாகவும் வாழவைப்பதே இக் கைத்தொழில், கமத்தொழில் கலைப்பொருட்காட்சியின் அடிப்படை நோக்கமாகும்.

என். பூரணலிங்கம.
(வவனியா தெற்குத் தமிழ்ப்பிரிவு, வவனியா)
காரியாதிகாரி.


## உங்கள் பணத்தை புத்தியாக முதலீடு செய்யுங்கள்


நீங்கள் தெரிவு செய்யக்கூடியது

WALKER-WOLSELEY

வாக்கர் வூல்ஸ்லி

நீர்ப்பாசன பம்புகள்

விலை ரூ: 1550/- மட்டுமே



2 அங்குல பெட்ரோல் / மண்ணெண்ணெய் பம்புகள்

★ மணித்தியாலத்துக்கு 6,000 கலன் நீரிறைக்கும்
★ இயக்கும் செலவு மிகக்குறைவு
★ பாதுகாப்பு மிகச் சுலபம்

புகழ்பெற்ற, நம்பிக்கை வாய்ந்த வாக்கர் வூல்ஸ்லி பெட்ரோல், மண்ணெண்ணெய் யந்திர பம்புகள் நீர்ப்பாசனத்துக்கும் மற்றும் சகல நீர் இறைப்பு வேலைகளுக்கும் ஏற்றவை. இந்த பம்புகள் இப்போது இலங்கையிலேயே வாக்கர் இன்டஸ்ட்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

WI இது வாக்கர் கைத்தொழில் நிறுவன உற்பத்திப் பொருள்.

இந்தப் பம்பில்ஏற்படக்கூடியபழுதுகள் செப்பனிட்டு பாதுகாப்புசேவைகளும் அளிக்கப்படும் என
வாக்கர், சன்ஸ் அன் கம்பனி லிமிட்டெட்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
ஸ்தாபனத்தாரின் உத்தரவாதம் பெற்றது.



## லக்ஸ்மி அரிசி ஆலே

எமது ஆலேயில்

நெல் குற்றியும், அரிசி, குரக்கன், மிளகாய், உழுந்து அரைத்தும், குறித்த நேரத்தில தயாரித்தும் குறைந்த செலவிலும் விலையிலும் கொடுக்கப்படும்

ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள்.

T. சுப்பிரமணியம்

# ல க் ஸ் மி ஆலே

கொறவப்பொத்தானை வீதி, வவனியா.



தந்தி: பெரியகடை போன்: 519

# ஜி. எச். ஏ. டி. சில்வா அன் கோ.

சில்வா ஸ்ரோர்ஸ்

வவுனியா.

எம்மிடம்

[1] பலசரக்குப்பகுதி:- பலசரக்குப் பொருட்கள், உணவுப் பொருட்கள், கண்டோஸ் சாக்லேட், தங்காலு தேயிலை, லீவர் ஸ்தாபன தயாரிப்புச் சாமான்கள், சிலோன் டுபாக்கோ கொம்பெனி சிகரட் வகைகள், குழந்தை உணவுகள், சுத்தமான தேங்காயெண்ணெய், நல்லெண்ணெய், நவதானியங்கள் யாவும்,

[2] பிடவைப்பகுதி:- நவநாகரீக நங்கையர், ஆடவர்கள் விரும்பும் பிடவைத் தினுசுகள், றெடிமேட் உடுப்புகள், பாட்டா, எலாஸ்டோ சப்பாத்து சிலிப்பர்கள், அழகுசாதனப் பொருட்கள், சூட்கேஸ், பேனா, இன்னும் பெட்ரோமக்ஸ் லாம்புகள், வானொலிப் பெட்டிகள், வானொலி பாட்டரிகள், பரிசுப் பொருட்கள்,

[3] இரும்புச் சாமான்பகுதி:- "வூல்ஸிலி" தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள், அல்கதீன்பைப்புகள், டியூக்கோ, டியூலக்ஸ், பெயின்ற் தீந்தைவகைகள், கழுகுமார்க் ஓடுகள், சிமெந்து அஸ்பெஸ்டஸ் சீட், அலுமினியம் கூரைத்தகடுகள், கட்டிடச் சாமான்கள், இரும்புச் சாமான்கள், விவசாய ரசாயனப் பொருட்கள், றட்ஜ், பி. எஸ். ஏ. சைக்கிள்கள், மண்ணெண்ணே அடுப்புகள்,

[4] சலன உப-உறுப்புப்பகுதி:- B. M. C. CAV. GIRLING லூக்காஸ் உபபாகங்கள், லூக்காஸ் பாட்டரிகள், உழவு யந்திர சாதனங்கள், பெரேடோ பிறேக் லைனிங், கார், லொறி, உழவு இயந்திர டயர், டியூப், இன்னோரன்ன தினுசுகளும் மொத்தமாகவும், சில்லறையாகவும் சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

எமது கிளை ஸ்தாபனம்:

## நவீன கம -- கைத்தொழில் கூட்டுத்தாபனம்

மில் வீதி — வவுனியா:

எம்மிடம் F போர்ட் (FORD) உழவு யந்திரங்கள், றன்சோம் உபகரணங்கள் "FORMOCO" உபபாகங்கள், இயந்திர உபஉறுப்புக்கள், யாவும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன்

சகலவிதமான இயந்திரங்களும் சிறந்த முறையில் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சித் தலைவரும் 50 மாணவர்களும் கைது

அடிஸ்அபாபா, ஆக. 28 பிரெஞ்சு அதிபர்ஜெனரல் டி-கோல் தமது மூன்றுமாத கால சுற்றுவிஜயத்தின் இரண்டாவது கட்டமாகநேற்று எதியோப்பியா வந்து சேர்ந்த பொழுது அங்கும் ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கிய தாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்குவருவதற்கு முன்னர் பிரெஞ்சு சோமாலியாவுக்கு ஜெனரல் டி கோல் விஜயம் செய்தபொழுது அங்கு அவருக்கு பெரும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு கலகமும் மூண்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ஜெனரல் டி கோல் விஜயம் செய்த பொழுது ஏற்பட்ட கலகம் தலைநகரில் நேற்று தொடர்ந்தும் நடைபெற்றது. இதன்விளைவாக சோமாலிய எதிர்க்கட்சித் தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஐம்பதுக்கு மதிகமான சோமாலியமாணவர்களும் கைது செய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இக்கலகத்தின்போது ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட இருவர் கொல்லப்பட்டதும் இருவர் காயமடைந்ததும் தெரிந்ததே.


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30 இரவு 9-30
SOPHIA LOREN
in
**EL CID**
(cinemascope color)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
**வெண்ணிற ஆடை**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
**அழகு நிலா**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
YUL BRYNNER
GEORGE CHAKIRIS
in
**KINGS OF THE SUN**
(Pannavision— & Technicolor)


## நடை பஜனை

யாழ்ப்பாணம், திங்கள் நல்லூர்த் தேர்த்திருவிழாவன்று ஏழாலை மக்கள் ஏழாலை இலந்தை கட்டி வயிரவர் கோயிலிருந்து நல்லூருக்கு நடைபஜனையொன்றை நடத்தவிருக்கின்றர்.


**இரண்டாவது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை) — நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (சாவகச்சேரி) — விஜயா (மட்டக்களப்பு) — ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
**அருணகிரிநாதர்**


## சசசார் பாராட்டு

காரைநகர், திங்கள் 'காரைநகர் மக்கள் ஆன்மீகத்துறையில் ஈடுபாடு கொண்டவர்கள். சமயகலாசாரத்தைப் பேணுவதில் மிக்க அக்கறைகொண்டவர்கள், இங்கு வந்து சென்றுள்ள பெரியார்களின் மூலம் இதனைஅறிய முடிந்துள்ளது இவ்வாறு இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் டாக்டர் பீம்சென் சச்சார் காரைநகர் சைவமகா சபையினர் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. பீம்சென் சச்சாரை வரவேற்றுப்பேசிய காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு.ஆ. தியாகராசா, காந்தி அடிகள், ஜவஹர்லால்நேரு போன்ற பெரியோரை வரவேற்ற இந்நிலம் பீம்சென் சச்சாரை வரவேற்பதிலும் பெருமைகொள்கிறது என்றார்.

### உயர்தரக்கல்வி மசோதா

## மூன்றும் முறையும் நிறைவேறியது

கொழும்பு, ஞாயிறு உயர்தரக் கல்வி மசோதா நேற்றிரவு பதினொரு மணிக்கு பாரிலிமெண்டில் 42 அதிகப்படியான வாக்குகளால் மூன்றுவது தடவையாக நிறைவேறியது.

மசோதாவாக்கெடுப்புக்கு விடப்பட்டபொழுது, 56 பேரும் எதிர்த்து 14 பேரும் வாக்களித்தனர்.

இம்மசோதா விவாதிக்கப்பட்டபொழுது, கல்வி மந்திரியின் அதிகாரங்களையோ அல்லது உயர்தரக் கல்விச் சபையின் அதிகாரங்களையோ தடைசெய்வதற்குப்புதிய திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் மேற்கண்ட முயற்சிகளை கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை வன்மையாக எதிர்த்திருந்தார்.


**நல்லூர் திருவிழா**
**ஈழநாடு**
**வண்ணமலர்**

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை,
அறிஞர் கி. வா. ஜ
திருமுருக
கிருபானந்தவாரியார்,
செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி,
கவிஞர்
இ. நாகராஜன்,
தில்லைக்கண்ணன்
மற்றும்
இலங்கை-இந்திய
அறிஞர்கள்
நல்லூர்க் கந்தன்மீதும்
முருகப்பெருமானின்
திருவருள் பற்றியும்
பாடியுள்ள கவிதைகள்
எழுதியுள்ள கட்டுரைகளுடன் நல்லூர்க் கந்தனின் திருஉலாக் காட்சிகளையும் தாங்கி
விரைவில்வெளிவருகிறது
**'ஈழநாடு'**
நல்லூர் திருவிழா மலர்.
சஞ்சிகை வடிவில்
வெளிவரும்
இம்மலரின் தனிப்பிரதி
விலை 50 சதம்
விற்பனையாளர்கள்
'ஈழநாடு' விநியோகப்
பகுதியினருடன்
தொடர்புகொள்ளவும்.


# யாழ்ப்பாணத்தில் தினமும் 30 பஸ்கள் பழுதடைகின்றன

## 50 பஸ்கள் உடனடியாகத் தேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணத்திலுள்ள மொத்தம் இருநூற்றுஐந்து பஸ்களில் தினந்தோறும்முப்பது பஸ்கள் பழுதடைந்து ஓடமுடியாத நிலையை அடைந்துவிடுகிறது; யாழ்ப்பாணத்துக்கு மேலும் புதிதாக ஐம்பது பஸ்கள் உடனடியாக அனுப்பப்பட்டால் பஸ்போக்குவரத்துச் சேவையைத்திருப்திகரமாகநடத்த முடியும் என்று இ. போ. ச. அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் கிழக்கு டிப்போவில்தான் அதிகமான பஸ்கள் இருக்கின்றன. இதற்கு அடுத்ததாக மேற்கு டிப்போவும் பின்னர் பருத்தித்துறைடிப்போவும் இடம் பெறுகின்றன. இவற்றுள் பருத்தித்துறைச் சேவையே திறம்பட நடைபெறுகிறதென்றும் இம்பாதையில் பழுதடையும் பஸ்களும் மிகக்குறைவென்றும் இ. போ. ச, அதிகாரியொருவர் கூறினர்.

தினமும் கிழக்கு டிப்போவில் 12 பஸ்களும், மேற்கு டிப்போவில் 20 பஸ்களும் பழுதடைந்துவிடுகின்றன. மேற்கு டிப்போவில் மட்டும் தினமும் 12 பஸ்கள் குறைவு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு 22 புதிய பஸ்கள் அண்மையில் கிடைத்தபோதிலும் மேலும் 50 புதிய பஸ்கள் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தால் திருப்திகரமானமுறையில் சேவையளிக்கமுடியுமென்று ஒரு இ. போ. ச. அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# 'எடா' என்ற சத்தத்தை தொடர்ந்து வெட்டு விழுந்தது!

## சரசாலை கொலை வழக்கில் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு 'எடா' என்ற சத்தம் கேட்டது டோர்ச்லைட்அடித்துப் பார்த்தேன்; முதலாம் எதிரி என் தகப்பனுரைக் கத்தியால் வெட்டினர். இரண்டாம் எதிரி ஓடிவந்து கணேசனைக் கத்தியால் வெட்டினர். நான் வந்த வழியால் ஓடிவிட்டேன்.''

சரசாலை கொலைவழக்கு நேற்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சாட்சியமளித்த சி. கதிர்காமசேகரம் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் சரசாலையில் வல்லி கந்தன், சின்னக்குட்டி, வேலன் ஆகிய இருவரும் கந்தன் சின்னத்தம்பியை இவ்வருடம் ஆவணி மாதம் 5-ம் திகதி கொலை செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. எல். தம்பித்துரை, புரக்டர் திரு. வி. செல்லத்தம்பி, திரு. எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராஞர்.

வழக்காளி சார்பில் புரக்டர் திரு. கே. கதிர்காமசேகரத்தின் உதவியுடன் சாவகச்சேரிப் பொலிசார் வழக்கை நடாத்தினர்.

தமது சாட்சியத்தில் சி. கதிர்காமசேகரம் மேலும் கூறியதாவது:

'சம்பவதினத்தன்று நான் குஞ்சர் சின்னத்தம்பி வீட்டில் இரவு எட்டு மணியளவில் இருந்தேன். காலஞ்சென்றவரான எனது தகப்பனுர் வந்து, வல்லி வளவிற்குப்போகவேண்டும் என்றார். குஞ்சன் சின்னத்தம்பி கணேசன், சின்னப்பொடியன் ஆகியோருடன் நானும் சென்றேன். அப்போது இரவு 9-30 இருக்கும். வயல் வெளியில் செல்லும்போது 'எடா' என்ற சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது முதலாம்எதிரி தகப்பனுரை வெட்டினர். இரண்டாம் எதிரி கணேசனை வெட்டினர். நான் பயந்து ஓடிவிட்டேன்'.

மேல்விசாரணை செப்டம்பர் 3-ம் திகதி நடைபெறும்

## பிரதிநிதிகள்.-

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். எனவே மந்திரியின் உத்தரவுகள் அமுலாகு முன் சபையில் சமர்ப்பிக்கப்படுவது நல்லது. அப்பொழுதுதான் மந்திரி எவ்வளவு பண்பாடுடையவர், அறிவாளி என்பதெல்லாம் தெரியவரும். அவர் பயப்படத் தேவையில்லை'' என்றார்.

திரு. வெர்னுட் சொய்சாவின் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோல்வியுற்றது. உபஅத்தியட்சகர்கள் நியமனம்பற்றி எதிர்க்கட்சியினரின் பிரேரணையும் தோல்வியுற்றது. இந்த பிரேரணை மீது டாக்டர் நாகநாதன் வாக்களிக்கவில்லை.

## சிறிமா....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'அலரிமாளிகை'யில் ஒரு சமயம் டெலிபோன் சம்பாஷணை பதிவு செய்யப்பட்டு ஒலிபரப்பியதை தாம் கேட்டதாகவும் அவர் கூறினர்.

பாடசாலைகள் எடுக்கப்பட்ட சமயத்தில் இருவர் டெலிபோனில் சம்பாஷித்ததை ஒற்றுக் கேட்டுப் பதிவு செய்யப்பட்டதாகவும் அந்தச் சம்பாஷணை ஒற்றுக் கேட்கப் படுகிறதென்பதைத் தெரிந்து கொண்ட அவர்கள் பிரஞ்சு மொழியில் சம்பாஷணையை மாற்றிக் கொண்டதாகவும் திரு. பீலிக்ஸ் தெரிவித்தார்.

## 12 காலி ஸ்தானங்களுக்கு 4800 பேர் மனு

கொழும்பு, சனி கொழும்பு மாநகரசபையில் ஓவசியர் பதவிகளுக்கான 12 காலி ஸ்தானங்களுக்கு4800பேர் மனுச் செய்துள்ளனர். இந்தப் பதவிக்கான குறைந்த பட்சதராதரம்ஜே.எஸ்.சி. யாகஇருந்த போதிலும்இந்த காலிஸ்தானங்களுக்கு மனுச்செய்துள்ளவர்களின் 89சதவிதத்தினர் ஜி.சி.ஈ. (சாதாரண) பரீட்சையில் சித்திபெற்றுள்ளவர்கள். சுமார் 1000 விண்ணப்பதாரர்கள் ஜி.சி.ஈ. (உயர்தர)பரீட்சையில் அல்லது அதற்குசமமான பரீட்சையில் சித்திபெற்றவர்கள்.


**தேவை**

சாறிக்கு குஞ்சம் (டசல்ஸ்)போடுவதற்கு தேர்ச்சி பெற்ற பெண்கள் தேவை. கமலா சாறீஸ் வேக்ஸ், செயின்ட் செபஸ்தியான் மேல்மாடி இல. 18, பெரியகடை யாழ்ப்பாணம், தொடர்பு கொள்ளவும். 1101


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org